அப்போஸ்தலனாகிய

# அந்திரேயா



திருமறை அறிஞர்

**Dr. A. கிறிஸ்டோபர்**

# அப்போஸ்தலனாகிய அந்திரேயா

ஆசிரியர்

REV.DR.A. கிறிஸ்டோபர்

வெளியிடுவோர்

**விண்ணக அப்பம்**

நேருவீதி, சூரம்பட்டி,

ஈரோடு – 9.


FIRST EDITION - April 2008

TOTAL COPIES - 2000



COPY RIGHT - TO AUTHOR



PRICE - Rs. 40.00 (IN INDIA)

BOOK NUMBER - T - 56



**FOR DETAILS CONTACT**

**WINNAGA APPAM**

**No. 4/2, NEHRU STREET, SURAMPATTI,**
**ERODE - 638 009. S.INDIA.**
**PHONE : (0424) 2271323 (Off)**
**Fax : (0424) 2277286**
**e-mail : winnagaappam@rediffmail.com**
**Bank A/C : Pastor A. CHRISTOPHER**
**Bank of India (Erode Branch)**
**A/C No : 820210100005638**

## அணிந்துரை

திருமறைப் பெரியார்

மறைதிரு. **யோபு ஞானப்பிரகாசம்**

இந்தியன் பெந்தெகொஸ்தே அஸம்பிளீஸ்

கோயம்புத்தூர் – 12.

அன்பு வாசகர்களுக்கு ! இனிய வாழ்த்துக்கள். இப்புத்தகத்தின் ஆசிரியர் திருமறை அறிஞர் பாஸ்டர். A.கிறிஸ்டோபர் அவர் களுக்காய் கர்த்தரைத் துதிக்கிறேன். ஈரோடு மண்டலத்திலுள்ள சபைகளின் கண்காணிப்பாளராகிய இவர் எளிமையானவர், பழக இனிமையானவர்.

மிகச்சிறந்த பேச்சாளரும், வேதாகம ஆசிரியருமாகிய இவர் தனது எழுத்தின் மூலம் எண்ணற்ற கிறிஸ்தவர்களை ஊக்குவித்து வருகிறார்.

திருமறையில் கிடைக்கின்ற மிகச் சொற்பமான வேத பகுதிகளை அடிப்படையாக வைத்துக் கொண்டு அற்புதமாக புத்தகம் படைக்கின்ற அபூர்வ தாலந்தை கர்த்தர் இவருக்குக் கொடுத்திருக்கின்றார். ‘யெப்தா’, ‘பிலேயாம்’, ‘பிலமோன்’ ‘ஆக்கில்லா பிரிஸ்கில்லா’ போன்ற இப்படிப்பட்ட அபூர்வ தலைப்புகளின் வரிசையில் இப்பொழுது அந்திரேயாவும் சேர்ந்து கொண்டார்.

அநேகர் பிரசங்கத்தினூடே தொட்டுவிட்டுப் போகிற இந்தப் பெயரை ஆராய்ந்து அநேகக் கருத்துக்களை பிட்டுப்பிட்டு வைக்கிறார். ஆசிரியரின் புதிய சிந்தனைக்காகவும், சிந்திக்க வைக்கும் கருத்துக்களுக்காகவும் கர்த்தரைத் துதிக்கிறேன்.

அடக்கமாய், ஆர்வமாய் அந்திரேயாக்களைப் போல நீங்கள் மாற கர்த்தர் உங்களுக்கு கிருபை புரிவதுடன், இந்நூல் ஆசிரியருக்கு நல்ல சுகத்தையும் ஆயுளையும் கர்த்தர் அருளுவாராக!

– ஆமென்.

## என்னுரை

என் இனிய வாசகர்களே! அன்பின் வாழ்த்துக்கள். கிருபை உங்களோடிருப்பதாக! கிறிஸ்துவின் பிரசன்னம் உங்கள் மேல் இருப்பதாக!

அப்போஸ்தலனாகிய அந்திரேயா என்னும் இந்த எனது 56வது படைப்பிற்காக கர்த்தரைத் துதிக்கிறேன். ஆதி சீஷனாகிய அந்திரேயாவைக் குறித்து கண்டிப்பாக கேள்விப்பட்டிருப்பீர்கள். ஆனால் அதிகப்படியான எவ்வளவு தகவல்களை அறிந்திருப்பீர்கள் என்று எனக்குத் தெரியாது.

என் சபை மக்களுக்கு அந்திரேயா என்ற தலைப்பில் நான் கொடுத்த செய்தியின் எழுத்து வடிவமே இஃது. இதை வாசிக்கும் பொழுது ஆவிக்குரிய வாழ்வில் தெளிவு, துணிவு, கனிவு, பணிவு என்று பல சிறப்பு அம்சங்கள் உங்களுக்குள் உருவாகும் என்று நம்புகிறேன்.

வாசியுங்கள்!
வளருங்கள்! வருகைக்கு ஆயத்தமாகுங்கள்!

**அன்போடும் ஜெபத்தோடும்**
**அவர் சேவையில்**
**அ. கிறிஸ்டோபர்.**

## படைக்கிறேன்

அந்திரேயா – என்றநூலை எழுதி முடித்திட
ஆவிக்குரிய கிருபைகள் அளித்தீரே ஸ்தோத்திரம்
இடர்கள் எனைவந்து தடுத்திட்ட போதிலும்
ஈற்றிலே வெற்றித் தந்தாய் ஸ்தோத்திரம்

உடலிலே பெலவீனம் வந்த போதும்
ஊக்கமதை நிறைவாய் தந்ததினால் ஸ்தோத்திரம்
எத்திசையும் வாசலை எமக்காய் திறந்தளித்து
ஏற்றமிகு ஆசீரை அளித்தீரே ஸ்தோத்திரம்

ஒன்றுபட்டு ஜெபித்திடவே மக்கள் தந்தாய்
ஓயாமல் உழைத்திடவே பெலனும் தந்தாய்
ஔஷதமாய் வேத வசனம் தந்தாய்
அஃதினால் இதைப் படைக்கிறேன் ஏற்றிடுவீர்

அன்போடும் ஜெபத்தோடும்
அவர் சேவையில்
அ. கிறிஸ்டோபர்.

## பொருளடக்கம்

**அதிகாரங்கள்**


1. அந்திரேயா – ஓர் அறிமுகம்
2. அந்திரேயாவின் குரு
3. ஆவிக்குரிய தாகமுள்ள அந்திரேயா
4. ஆத்தும ஆதாயகனாகிய அந்திரேயா
5. அரும்புகளின் நண்பர் அந்திரேயா
6. அப்போஸ்தலனாகிய அந்திரேயா

# 1
# அந்திரேயா – ஓர் அறிமுகம்

அன்பு வாசகர்களே! அன்பரின் நாமத்தில் வாழ்த்துக்கள். 'அந்திரேயா' என்ற தலைப்பில் புத்தகம் ஒன்று வடித்திட ஆவல் பொங்கி எழுந்ததினால் அதிக பட்ச தகவல் பெற்றிட ஆர்வம் கொண்டு ஆங்கில மற்றும் தமிழ் ஆய்வு வேதாகமங்களை அள்ளி எடுத்துக் கொண்டு, அமர்ந்து அலச ஆரம்பித்தேன்.

ஆர்வக் கோளாரினால் அதிவேகமாக அத்தனை வேதாகமத்தையும் புரட்டித் தீர்த்தேன். அபூர்வ கருத்துக்கள் கிட்டுமென்று எதிர்பார்த்த எனக்கு அதிர்ச்சி தான் மிஞ்சியது. அத்தனை வேதாகமங்களிலும் சொல்லி வைத்தாற்போல அந்திரேயாவைக் குறித்து அதிக பட்ச தகவல் எதையுமே தரவில்லை.

இவர்கள் தான் இப்படி. புதிய ஏற்பாட்டை இன்னொரு முறை வாசித்து அந்திரேயாவைக் குறித்து புத்தம் புதிய செய்தியினை பெற்றிடலாம் என்று எண்ணி முழுமூச்சாய் படித்து முடித்தேன். அதிலும் மிஞ்சியது ஏமாற்றம் தான்.

முதல் மூன்று சுவிசேஷங்கள் அந்திரேயாவின் பெயரை இருட்டடிப்பு செய்து விட்டார்கள் என்றே சொல்லலாம். இந்த மூன்று சுவிசேஷகர்களில் ஒருவராகிய லூக்கா வடித்த ஆதி திருச்சபையின் வரலாறாகிய அப்போஸ்தலர் நடபடிகளில் 2-ம் அதிகாரத்திற்கு மேல் மறந்தும் கூட, மருந்துக்குக் கூட அந்திரேயாவின் பெயரை குறிப்பிடவில்லை என்பது தான் குறிப்பிட வேண்டிய விஷயம். அதுமட்டுமா? அதற்குப் பிறகு புதிய ஏற்பாட்டில் எந்த இடத்திலும் அந்திரேயாவின் பெயர் வரவில்லை என்பது தான் ஆச்சரியத்திலிருந்து வெளிவர



முடியாதபடி அடைத்து வைத்திருக்கும் மாபெரும் போராட்டம்.

ஆனாலும் 'அந்திரேயா', 'அந்திரேயா' என்ற அலை ஆழ்மனதில் ஆழி பேரலையாய் எழுந்ததினால் யோவான் எழுதின நற்செய்தி நூலை நாளில் பத்து முறை வாசித்தேன். பரிசுத்த ஆவியானவர் பளிச், பளிச் என்று பல காரியங்களை படம் பிடித்துக் காட்டினார். அவைகளைத் தான் வருகிற பக்கங்களில் பகுதி பகுதியாக உங்களுக்கு சொல்லப் போகிறேன்.

ஆரம்பமே அலுப்பு தட்டுகிற, போராட்டமாக இருந்தாலும் அடுத்ததாவது அமைதலாக இருக்குமென்றால் அதிலும் போராட்டம், அந்திரேயா என்ற புத்தகத்திற்கு தலைப்பாக என்ன கொடுப்பது என்பதுதான் அந்தப் போராட்டம். 'ஆத்தும ஆதாயகனாகிய அந்திரேயா', 'ஆதி சீஷனாகிய அந்திரேயா', 'அரும்புகளின் அன்பர் அந்திரேயா' என்றெல்லாம் விதவிதமான தலைப்புகள் டைட்டிலாக என் கண் முன்னால் திரையோடிக் கொண்டிருந்தது. அவைகளில் எனக்குத் திருப்தி ஏற்படவில்லை. வழக்கம் போல ஆவியானவர் குறுக்கிட்டார். புத்தகத்தின் தலைப்பை குறிப்பிட்டார். 'அப்போஸ்தலனாகிய அந்திரேயா' இந்த தலைப்பை நான் சமாதானத்தோடு ஏற்றுக்கொண்டேன்.

ஒரு புத்தகத்தை எழுதத் தொடங்குவதற்கு முன்பு இரண்டு காரியங்களைச் செய்வது எனது பழக்கம். முதலாவது நான் எழுதப் போகிற புத்தகத்தின் கருப்பொருளின் அடிப்படையில் தமிழ் அல்லது ஆங்கிலத்தில் எனக்கு முன்னே யார்? யார்? எழுதியிருக்கிறார்கள் என்று ஆய்வு செய்வது. இரண்டாவது நான் எழுதப்போகிற காரியத்தைக் குறித்து மக்கள் மத்தியில் எந்த அளவிற்கு அறிவு அல்லது தெளிவு இருக்கிறது என்பதை ஆராய்வது.

இந்த நடைமுறை செயல்பாட்டிலும் எனக்கு அதிர்ச்சி தான் மிஞ்சியது. அந்திரேயாவைக் குறித்து தனியாக புத்தகம் ஒன்று வெளிவரவில்லை. அதாவது நான் தேடியவரை எனக்குக் கிட்டவில்லை. அப்போஸ்தலனாகிய அந்திரேயா என்று நான் சொன்னபோது, ஐம்பது விழுக்காடு விசுவாசிகள் அப்படியா? என்று என்னை ஆச்சர்யத்தோடு பார்த்தனர்.

இதனால் எனக்கு சோர்வு ஏற்படவில்லை. அந்திரேயாவைக் குறித்து எழுதியே ஆக வேண்டும் என்கிற தாக்கமும் ஊக்கமும் என்னை பற்றிக் கொண்டது. நான் யோவானுக்கு நன்றி சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன். எந்த யோவானுக்கு என்று உங்களுக்கு கேள்வி எழலாம். யோவான் ஸ்நானனுக்கா? திவ்ய வாசகனாகிய யோவானுக்கா? என்று கூட விவரமாக சிலர் பிரித்து கேள்வி கேட்கலாம். இந்த இரண்டு பேரும் என் நன்றிக்குரியவர்கள். யோவான் ஸ்நானன் அந்திரேயாவுக்கு இயேசுவை அடையாளம் காட்டினான். திவ்ய வாசகனாகிய யோவான் இயேசுவின் சீஷனாகிய அந்திரேயாவை நமக்கு அடையாளம் காட்டினார். இந்த இருவரும் சற்று சுயநலமாக செயல்பட்டிருந்தால் அந்திரேயாவைக் குறித்த எந்த தடயமும் நமக்கு கிட்டாமலே போயிருக்கும்.

முதல் மூன்று சுவிசேஷகர்களில் அந்திரேயாவினுடைய ஆரம்பத்தைக் குறித்தோ, குடும்பத்தைக் குறித்தோ போதுமான பொதுவான தகவல் இல்லை என்றாலும் அன்பின் சீஷனாகிய யோவான் அவைகளைக் குறித்து அதிக பட்ச தகவலை நமக்குத் தருகிறார்.

யோவான் நற்செய்தி நூல் முதல் அதிகாரத்தை வாசித்தால் அந்திரேயாவைக் குறித்து குறைந்த பட்ச தகவல்களை நம்மால் அறிந்து கொள்ள முடியும்.



இவருடைய தகப்பனின் பெயர் யோனா. இவன் சகோதரனின் பெயர் சீமோன் என்று பதிவு செய்யப் பட்டிருக்கிறது. பேதுருவின் சகோதரன் அந்திரேயா என்று நான்கு நற்செய்தி நூல்களிலும் பதிவு செய்யப்பட்டிருக்கிறது.

இவனுடைய சொந்த ஊர் ‘பெத்சாயிதா’ என்ற ஊர். பெத்சாயிதா என்பதற்கு மீன்பிடி நகரம் (மீன்பிடி வீடு) என்று பெயர். இந்தப் பெயருக்கும் அந்திரேயாவின் தகப்பனாகிய யோனாவுக்கும் ஒரு நெருங்கிய தொடர்பு உண்டு.

இன்னும் சொல்லப் போனால் பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசியாகிய யோனாவுக்கும், அந்திரேயாவின் தகப்பன் யோனாவின் பெயருக்கும் கூட ஓரளவு தொடர்பு உண்டு.

அதாவது தீர்க்கதரிசியாகிய யோனா காத்தேப்பேர் ஊரைச் சார்ந்தவன். இந்த காத்தேப்பேர் பெத்சாயிதாவுக்கு அருகில் இருந்த பெரிய மீன்பிடி பட்டணம். அங்கிருந்து பிரசித்தம் பெற்ற யோனாவின் பெயரை மற்றவர்கள் சூட்டிக் கொள்வதற்கு ஆர்வம் கொண்டார்கள்.

அந்த ஆர்வத்தினுடைய மிகுதி வழி வழியாய் மீனவ நண்பர்கள் இந்த பெயரில் அழைக்கப்பட்டார்கள். அந்த வகையில் தான் அந்திரேயாவின் தகப்பனுக்கும் யோனா என்ற பெயர் வழங்கலாயிற்று.

அந்திரேயா – யோவான், இயேசு ஆகியோரை குருவாக ஏற்றுக் கொண்ட காலத்தில் தொடர்ந்து மீன்பிடி தொழிலை செய்து வந்தான்.

இவர்களுக்கென்று சொந்தமான ஒரு வீடு இருந்தது. அந்திரேயா, பேதுருவின் குடும்பம் (மாமியார் உட்பட) அந்த வீட்டில் இருந்தார்கள். அந்திரேயா இயேசு தங்கின இடத்தில் தங்கியது மாத்திரமல்ல தனது வீட்டில் இயேசு தங்கும்படி இயேசுவை அழைத்துச் சென்றான் என்பது குறிப்பிடத்தக்கது.

இப்படிப்பட்ட வேளையில் தான் ஜுரமாயிருந்த பேதுருவின் மாமியை இயேசு சுகப்படுத்தினார் (மாற்கு 1 : 29).

இயேசு இந்தப் பட்டணத்திற்கு வரும் போதெல்லாம் இந்த வீட்டில் தங்கினார் என்பது குறிப்பிடத்தக்கது. இந்த வீட்டில் தங்கும் போதெல்லாம் திரளான மக்கள் அவரைத் தேடி வந்தார்கள் என்றும், கூடி வந்த மக்களுக்கு இயேசு அற்புதம் செய்தார் என்றும் வேதம் சொல்கிறது (மாற்கு 1 : 33).

ஆக அந்திரேயாவின் வீடு ஆண்டவர் அற்புதத்தை வெளிப்படுத்துகிற வீடாக இருந்தது. கப்பர் நகூமுக்கு இயேசு வரும் போதெல்லாம் பேதுரு, அந்திரேயா என்பவர்களுடைய வீடு இயேசுவின் தங்குமிடமாக தலைமையிடமாக இருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

மாற்கு 2-ம் அதிகாரத்தில் திமிர்வாதக்காரனை மேற்கூரையை பிரித்து வீட்டிற்குள் இறக்கினார்களே, இயேசுவும் அவர்கள் விசுவாசத்தைக் கண்டு சுகமாக்கினாரே அந்த வீடு யாருடைய வீடு தெரியுமா? அந்திரேயா, பேதுரு என்பவர்களின் வீடு தான் அது. இயேசு தங்குவதற்காக மாத்திரமல்ல ஜனம் விடுதலை பெறுவதற்காக வீட்டையே தானமாக கொடுத்தவர்கள் இவர்கள்.

இன்றைக்கு சில கிறிஸ்தவர்கள் வீட்டுக் கூட்டம் வைக்கவே பயப்படுவார்கள். மக்கள் வந்தால் சுவர் அழுக்காகி விடும், சோபா தேய்ந்து விடும் என்று அஞ்சி வெளியிலேயே தொடர்பைத் துண்டித்துக் கொள்ளும் இவர்களுக்காக வருத்தப்படுகிறேன்.

அந்திரேயாவும், பேதுருவும் ஆண்டவரை ஏற்றுக் கொண்டது மாத்திரமல்ல. தங்கள் வீட்டின் கூரை பிரிக்கப்பட்டாலும் பரவாயில்லை. கிறிஸ்து அறிவிக்கப்பட வேண்டும், மகிமைப்பட வேண்டும் என்று தங்களுக்கு உண்டானவைகளையே அர்ப்பணித்தார்கள்.



என்ன நீங்கள் அந்திரேயாவைப் பற்றி சொல்ல வந்து பேதுருவையும் இழுத்துப் போடுகிறீர்கள் என்று பெருமூச்சு விடாதீர்கள். சரி, சரி பேதுருவைக் குறித்து இன்னொரு புத்தகத்தில் பார்ப்போம். அந்திரேயாவைக் குறித்து ஆழமாக சிந்திப்போம்.

பேதுரு என்ற பெயருக்கு அர்த்தம் என்னவென்று வேதத்தில் வெளிப்படையாக சொல்லப்பட்டு விட்டது. அந்திரேயா என்ற பெயருக்கும் அர்த்தம் இருக்கிறது. **'அந்திரேயா'** என்ற பெயருக்கு **'மனுஷ தன்மையுள்ளவன்'** என்று பொருள்.

அநேகருக்கு கோபம் வந்தால் அடுத்தவர்களைப் பார்த்து, மனுஷ தன்மையா நடந்துக்குங்க என்று சொல்வார்கள் அல்லவா? அப்படியானால் தேவ தூதனைப்போல் அல்லா விட்டாலும் மனுஷ தன்மையுள்ளவர்களாவாவது நாம் நடந்து கொள்ள வேண்டும் என்று விளங்குகிறதல்லவா?

அந்திரேயாவின் முழு நடவடிக்கைகளையும் ஆராய்ந்துப் பார்த்தால் சமூகத்திற்குள்ளும், சமுதாயத்திற்குள்ளும், கிறிஸ்துவின் சேவைக்குள்ளும் மனித நேயமிக்க மாமனிதனாக விளங்கினார் என்று நம்மால் உணர முடிகிறது.

'மனுஷ தன்மையுள்ளவன்' என்பதை 'புருஷ தன்மையுள்ளவன்' என்றும் சொல்லலாம். புருஷனுக்குரிய தன்மை என்ன? தைரியமுள்ளவன் என்பது தான்.

தமிழ் வேதாகம ஒத்துவாக்கிய அகராதியின் தந்தையாகிய கனம் R.N. ஆசீர்வாதம் அவர்கள் தன்னுடைய சத்திய வேதாகமப் பெயர் அகராதியில் அந்திரேயா என்பதற்கு தைரியசாலி என்று பொருள் எழுதியிருக்கிறார்.

அந்திரேயா என்பதற்கு அது நேரடியான பொருளாயில்லாமல் போனாலும் புருஷனுக்குரிய லட்சணங்களில் தைரியம் பிரதானமானது என்பது தெளிவு.

பிரபல ஆங்கில அகராதி STRONG, அந்திரேயா என்ற பெயருக்கான வேர் சொல்லியிருந்து பிறந்த பல்வேறு சொற்களில் 'தைரியம்' என்ற வார்த்தையும் ஒன்று என்று குறிப்பிடுகிறது.

எனவே அந்திரேயா என்பதற்கு தைரியசாலி என்று பொருள் கூறுவதில் தவறில்லை. தன்னுடைய மரணத்தின் கடைசி நிமிடங்கள் வரை பாடுகளின் மத்தியிலும் தைரியமாய் பிரசங்கித்தவர் இந்த அந்திரேயா.

மரண தண்டனை விதிக்கப்பட்ட போது அதைக்கண்டு விலகி ஓடாமல் கிறிஸ்துவை மறுதலியாமல் 'சிலுவையே வா, என்னை அணைத்துக் கொள்' என்று மரண தண்டனையை மன பலத்துடன் ஏற்றுக் கொண்ட தைரியசாலி அந்திரேயா.

அவனுக்கு சிலுவையில் மரண தண்டனை நியமிக்கப்பட்ட பொழுது என்னை சிலுவையில் அறையுங்கள். ஆனால் இயேசு அறையப்பட்ட சிலுவையைப் போல் எனக்கு வேண்டாம். எனக்கு X வடிவ சிலுவையை தாருங்கள் என்று கேட்டு அதிலே இரண்டு நாள் தொங்கிக் கொண்டே பாடுகள் மத்தியில் கிறிஸ்துவை பிரசங்கித்துக் கொண்டே பரம இராஜ்யம் பிரவேசித்தவர் இந்த அந்திரேயா.

சீஷன் என்பது உயிர் பிழைப்பதற்காக இயேசுவை பின்பற்றுவது அல்ல. உயிர் துறப்பதற்காகவும் சீஷனாக ஆவது தான் மேன்மையான அனுபவம்.

அப்போஸ்தலர்கள் 'புருஷராயிருங்கள்' என்று எழுதியிருப்பதின் உள்ளார்ந்த பொருள் நாம் தைரியமுள்ளவர்களாக இருக்க வேண்டும் என்பது தான்.

★ கிறிஸ்தவர்களாய் வாழ தைரியம் வேண்டும்.

★ கிறிஸ்துவைக் குறித்து சாட்சி சொல்ல தைரியம் வேண்டும்.



★ கிறிஸ்து உபதேசித்ததை கடைபிடிக்க தைரியம் வேண்டும்.

★ பாவத்தை கண்டிக்க தைரியம் வேண்டும்.

★ அநீதியை கண்டிக்கும் தைரியம் வேண்டும்.

இப்படிப்பட்ட தைரியம் உள்ளவர்கள் தான் புருஷ லட்சணம் உள்ளவர்கள். மனுஷ தன்மை உள்ளவர்கள். சுருங்கச் சொல்வோமானால் அந்திரேயாக்கள்.

அந்திரேயா என்ற அப்போஸ்தலனுக்குள் பெயர் சார்ந்த குணம் மாத்திரமல்ல அநேக அற்புத குண நலன்கள் ஆறாய் பெருகியிருந்தது. அஃதினை பின்னால் வரும் அதிகாரங்களில் விபரமாய் எழுதுகிறேன்.

அந்திரேயாவைக் குறித்து எழுதுவதற்கு முன்பாக அவனது ஆரம்ப குருவாகிய யோவான் ஸ்நானனைக் குறித்து சில பக்கங்கள் நான் எழுதியே ஆக வேண்டும். ஏனென்றால் அந்திரேயாவுக்குள் புதைந்திருந்த அற்புதமான குணநலன்களுக்கு அவனது குருவாகிய யோவான் ஸ்நானனின் போதிப்பே காரணம்.

ஒருவர் யாரால் நடத்தப்படுகிறார்களோ அவர்களின் குணாதிசயங்களின் பாதிப்பு தொற்றிக் கொள்வது பொதுவான விதியாகும்.

அந்திரேயா முதல் சீஷனானாலும் மிகச்சிறந்த ஆத்தும ஆதாயகன் என்று எண்ணப்பட்டாலும் தன்னை எந்த காரியத்திலும் முன்னிறுத்தாமல் தன்னை மறைத்து அந்தரங்கத்தில் ஒளித்துக் கொண்டதற்கு காரணம் அவனது குருவான யோவான் ஸ்நானனின் வாழ்க்கை, வார்த்தை இவைகளின் பாதிப்பே.

எனவே அந்திரேயாவைக் குறித்து ஆய்வதற்கு முன்பாக அவரை இயேசுவுக்கு நேரே வழி நடத்திய யோவான் ஸ்நானனைக் குறித்து அடுத்த அத்தியாயத்தில் சில பக்கங்களை நான் எழுத விரும்புகிறேன்.

# 2
# அந்திரேயாவின் குரு

இயேசு கிறிஸ்துவின் சீடராவதற்கு முன்பாக அந்திரேயா யோவான் ஸ்நானனை தன்னுடைய குருவாக ஏற்றிருந்தார்.

புதிய ஏற்பாட்டிலே விசேஷமானவரும் மிக வித்தியாசமானவருமாகிய இந்த யோவான் மாமனிதராக விளங்கினார்.

யூத மக்கள் மத்தியில் பரபரப்பையும், மார்க்கத் தலைவர்கள் மத்தியில் படபடப்பையும், ஆட்சியாளர்கள் மத்தியில் பதை பதைப்பையும் உண்டாக்கிய புரட்சிப் புயல் இந்த யோவான் ஸ்நானன். இவருக்கென்று எத்தனையோ சிறப்புகள் இருந்ததை வேதம் நமக்கு தெளிவூட்டுகிறது.

இயேசு கிறிஸ்து கூட ஸ்திரீயினிடத்தில் பிறந்தவர்களில் யோவானை விட பெரியவன் ஒருவனும் இல்லை என்று சொல்லியிருக்கிறார் என்பதை இங்கே நீங்கள் நினைவு கூற வேண்டும்.

இயேசு கிறிஸ்துவின் கன்னிப் பிறப்பை பல நூற்றாண்டுகளுக்கு முன்பாக தீர்க்கதரிசனமாக சொன்னது போலவே வனாந்தரத்தில் கூப்பிடுகிற சத்தம் என்ற ஏசாயா யோவானைக் குறித்த முன் அறிவித்திருந்தார்.

'உனக்கு ஒரு குமாரன் பிறப்பார் அவருக்கு இயேசு என்று பேரிடுவாயாக' என்று முன் கூட்டியே அறிவித்த அதே தேவ தூதனால் சகரியாவுக்கு 'உனக்கு ஒரு மகன் பிறப்பான் அவனுக்கு யோவான் என்று பெயரிடுவாய்' என்று அறிவிக்கப்பட்டது.

'இயேசு கிறிஸ்து பரிசுத்த ஆவியினால் உற்பவித்தார்' உற்பத்தியாகும் பொழுது யோவான் பரிசுத்த ஆவியில்



நிறைந்திருந்தார். இயேசு வார்த்தையாய் வந்தார், யோவான் சத்தமாய் வெளிப்பட்டான்.

இப்படி அநேக மேன்மைகளை யோவான் ஸ்நானனைக் குறித்து அடுக்கிக் கொண்டே போகலாம். வயது அடிப்படையில் இயேசுவைவிட யோவான் மூத்தவர். அது மட்டுமல்ல இயேசுவுக்கே ஞானஸ்நானம் கொடுத்தவர். இப்படி இன்னும் கூட விவரித்துக் கொண்டே போகலாம்.

ஆனால், தான் வாழ்ந்த காலத்தில் இவைகளைக் குறித்து யோவான் மேன்மை பாராட்டினாரா? என்றால் இல்லை என்பது தான் யதார்த்தம். யோவான் தனக்கிருந்த மேன்மைகளுக்கு எதிர் திசையில் பயணப்பட்டார் என்பது குறிப்பிட வேண்டிய சிறப்பம்சம்.

உங்களுக்கு இதை விளக்க விரும்புகிறேன். இயேசுவைவிட வயதில் பெரியவராகிய இவர் சொன்னதைக் கவனித்துப் பாருங்கள், 'அவர் எனக்குப் பின் வந்தும் என்னிலும் மேன்மையுள்ளவர்' (யோவா 1 : 27) அவன் 'என்னிலும் வல்லவர் ஒருவர் எனக்குப்பின் வருகிறார்' (மாற் 1 : 7) என்றான்.

அத்தோடு அவன் நிறுத்திவிட வில்லை, 'அவர் பெருகவும் நான் சிறுகவும் வேண்டும்' என்றும் விரும்புகிறேன் என்றான். எவ்வளவு பெரிய தாழ்மையின் சிந்தை யோவானுக்குள் இருந்தது என்பதை எண்ணிப்பாருங்கள். குருவாய் இருப்பதற்கு, தலைவராய் இருப்பதற்கு அடிப்படைத் தகுதியே இந்த தாழ்மை தான்.

அப்போஸ்தலனாகிய பவுல்கூட, "அப்போஸ்தல ரெல்லாரிலும் நான் சிறியவன்" என்று தாழ்த்தினார். அவர் தன்னைத் தாழ்த்தினதினால் மனுஷனால் குப்பைக் கூடைக்குள் எறியப்படவில்லை. புதிய ஏற்பாட்டு சபையின் ஆதிகால விரிவாக்கத்தின் ஆதாரமாகவும், புதிய ஏற்பாட்டின் அதிகபட்ச

ஆகமங்களின் ஆசிரியராகவும் தேவன் அவரை உயர்த்தினார்.

கிறிஸ்து பிதாவினால் இந்த உலகத்திற்கு அனுப்பப்பட்டது போல கிறிஸ்துவுக்கு வழியை ஆயத்தம் பண்ணும்படி யோவான் பிதாவினால் இவ்வுலகத்திற்கு அனுப்பப்பட்டார். தான் அனுப்பப்பட்ட நோக்கத்தை மாத்திரம் நிறைவேற்றுவதற்காக யோவான் தன்னைத் தானே தாழ்த்தினார்.

தேவனுக்கு சமமாய் இருப்பதை கொள்ளையாடின பொருளாய் எண்ணாமல் தன்னை சிலுவை பரியந்தம் இயேசு தாழ்த்தினதை இந்த நேரத்தில் சேர்த்து சிந்தியுங்கள்.

தாழ்மை என்பது மேன்மையான சுபாவம் மாத்திரமல்ல. தெய்வீக சுபாவம் என்பதை சிந்தையில் வையுங்கள். 'தாழ்மையுள்ளவர்களுக்கு கிருபையளிக்கிறார்' என்று சொல்லப்பட்டதை கருத்தில் கொள்ள வேண்டும்.

நம்முடைய பிறப்பை வைத்து நமக்கு அருளப்பட்டிருக்கிற கிருபையின் அளவை வைத்து நம்மால் ஞானஸ்நானம் பெற்ற மக்களின் நிலை அல்லது எண்ணிக்கையை வைத்து நம்மை பெரிய ஆளாக எண்ணி விடக்கூடாது.

இயேசுவுக்கே ஞானஸ்நானம் கொடுத்த பின்னும் தன்னைக் குறித்து மேன்மை பாராட்டாத யோவானின் தாழ்மை சிந்தையை நல்ல பாடமாக எடுத்துக் கொள்ளுங்கள்.

யோவானின் எழுச்சியைக் கண்ட பலர் மிரட்சி அடைந்தார்கள். ஒவ்வொருவர் உள்ளத்திலும், ஒவ்வொரு விதமான கேள்வி அதை வாயைத் திறந்து அவனிடமே கேட்டு விட்டார்கள். அதற்கு யோவான் அளித்த பதில்தான் படு சூப்பர்.

**கேள்வி**

நீர் கிறிஸ்துவா?

நான் அல்ல.

நீர் எலியாவா?



நான் அல்ல

நீர் தீர்க்கதரிசியா?

நான் அல்ல.

யோவான் தனக்கு எவ்வளவு மேன்மைகளிருந்தாலும் நான் அல்ல என்று சொல்லி, தன்னை வெறுமையாக்கிக் கொண்டதுதான் பாராட்டுதலுக்குரிய அனுபவம். இந்த 'அல்ல' என்கிற பாட்டின் உச்சகட்டமாக, 'அவரின் பாதரட்சையின் வாரை அவிழ்ப்பதற்கும் தகுதியுள்ளவன் அல்ல' என்று சொன்னது தான்.

இயேசு கிறிஸ்து தன்னை வெறுமையாக்கினது போலவே அவருக்கு வழியை ஆயத்தம் பண்ண வந்த யோவான் ஸ்நானனும் தன்னை வெறுமையாக்கினது எத்தனை பொறுத்தம் என்பதை சிந்தித்துப் பாருங்கள்.

அப்படியானால் தெய்வப் பிள்ளைகளாகிய நாம் நம்மை எவ்வளவு தூரம் வெறுமையாக்க வேண்டியது அவசியம் என்பதை உணருங்கள்.

'நானல்ல' என்று சொல்வதற்குப் பதிலாக 'நானே அது' என்று சொல்வதை அநேகர் சர்வ சாதாரணப் பழக்கமாக்கிக் கொண்டார்கள். தாங்கள் சொல்லி ஏதாகிலும் நடந்துவிட்டால் தீர்க்கதரிசி என்று தம்பட்டம் அடித்துக் கொள்கின்றார்கள்.

பக்கத்து நாட்டுக்கு போய் வந்து விட்டால், உலக சுவிசேஷகன் என்று பெயர் சூட்டிக் கொள்கின்றார்கள். இல்லாத ஒன்றை இருப்பதைப் போல காட்டிக் கொள்கிற புத்தி கிறிஸ்தவ உலகத்திற்குள் எப்படி நுழைந்தது என்று புரியவில்லை.

தொலைக் காட்சிகளில் வெளிவருகிற 'க்ரைம்' தொடர்நிகழ்ச்சிகள் கதை திருட்டு, பெயர் திருட்டு, என்று சினிமாக்காரர்கள் அடித்துக் கொள்வது போல ஒரே பாடலுக்கு நான்தான் ஆசிரியர் என்று இரண்டு பேர் சொந்தம்

கொண்டாடுகின்றனர்.

கிறிஸ்தவத்திற்குள் வந்துவிட்டது படுவேதனை. சில மாதங்களுக்கு முன்பு தமிழன் தொலைக்காட்சியில் தேவராகங்கள் என்ற கிறிஸ்தவ நிகழ்ச்சியில் என் சபையைச் சார்ந்த வாலிபப் பெண் பிள்ளை ஒருவர் பாடி முதல் பரிசு பெற்று திரும்பி வந்தார்.

சந்தோஷமாக நாங்கள் சந்திக்க வேண்டிய நேரத்தில் அவர் கண் கலங்கி இருந்தது. நான் அது ஆனந்தக் கண்ணீர் என்று எண்ணினேன். கடைசியில்தான் உண்மை எனக்குப் புரிந்தது.

தேவ கிருபையால் நான் எழுதிய பாடலைத் தான் அவர் பாடியிருக்கிறார். அங்கே வந்த இன்னொரு போட்டியாளர் (மலையாள சகோதரி) இது எங்கப் பாஸ்டர் எழுதின பாட்டு என்று அடித்துச் சொன்னதுடன் அந்தப் பாடலை பாடுவதற்கு ஆட்சேபமும் தெரிவித்திருக்கிறார். ஆனாலும் இவர் பாடி பரிசுப் பெற்று வந்துவிட்டார்.

இந்த செய்தியை அழுது கொண்டே என்னுடன் சொன்னதுடன் உங்கள் பாடல்களை உடனே கேசட்டாக போட வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

என் இயேசு மாறாதவரே என் இயேசு மாறாதவரே
இந்த விண் மாறும் மண் மாறும்
நம்பினோரின் சொல் மாறும்
என் இயேசு மாறாதவரே

என்ற பல்லவியில் ஆரம்பிக்கும் இந்தப் பாடலை பதினெட்டு ஆண்டுகளுக்கு முன்பு நான் எழுதினேன். எங்கள் சபை கன்வென்ஷனுக்கு இசையமைக்க வந்த (மலையாளம் தெரிந்த) சகோதரர் தான் போகிற இடங்களிலெல்லாம் இந்தப் பாடலைப்பாடி மக்களை மகிழ்வூட்டியதுடன், குமரி மாவட்ட



கேரளத்தில் மலையாளத்தில் பாடிவிட்டார். கடைசியில் அங்கே சுற்றி இங்கே சுற்றி ஆசிரியர் யார் என்று கேள்வி எழுந்துவிட்டது.

இந்தப் பாடலுக்கு நான்தான் ஆசிரியர் என பதிவு செய்கிறேனென்று எண்ண வேண்டாம். இந்தப் பாடலுக்கு வேறு யாரும் ஆசிரியர் அல்ல என்று பதிவு செய்ய விரும்புகிறேன்.

சுயபுராணம் பாடிவிட்டேன் என்று யோசிக்காதீர்கள். என்னைப் பொறுத்த வரைக்கும் இது பெரிய விஷயமல்ல. ஆனால், தமிழ்நாட்டில் இரண்டு ஜாம்பவான்கள் ஒரே பாடலை தங்களின் இரண்டு கேசட்டுகளில் பதிவு செய்து, தான்தான் அதன் ஆசிரியர் என்று சொல்லிக் கொள்வது எவ்வளவு ஆபத்தானது; அசிங்கமானது.

நானல்ல, என்னாலல்ல என்று தலைவர்கள் எப்பொழுது சொல்லக் கற்றுக் கொள்கிறார்களோ அப்பொழுது தான் இந்த தேசத்தில் ஒற்றுமையும் அதன் அடிப்படையில் எழுப்புதலும் உண்டாகும்.

**தாழ்மை, வெறுமை,** என்ற உயரிய பண்புகள் மாத்திரமல்ல **எளிமை** என்கிற மூன்றாம் பண்பு யோவான் ஸ்நானனிடமிருந்தது குறிப்பிடத்தக்கது. மாற்கு 1: 6ஐ வாசித்துப் பாருங்கள். 'யோவான் ஒட்டக மயிர் உடையைத் தரித்து, தன் அறையில் வார்க்கச்சையைக் கட்டிக் கொண்டவனாயும், வெட்டுக் கிளியையும், காட்டுத் தேனையும் புசிக்கிறவனாயும் இருந்தான்'.

உடையிலும், உணவிலும் எளிமையைக் கடைபிடித்தவன் யோவான் ஸ்நானன். வெத்து பந்தா பண்ணவில்லை. வஸ்திரம் நம்மை நிலை நிறுத்தாது. வார்த்தைகள் தான் நிலை நிறுத்தும். எளிமையான தோற்றத்தில் இருந்தாலும், வலிமையான வார்த்தை யோவானிடத்தில் இருந்தது.

அரசன் என்றும் பாராமல் சத்தியத்தை தைரியமாய்

பிரசங்கித்து, தன் ஜீவனை விட்டு வழிகாட்டியாய் வாழ்ந்தவர் இந்த யோவான் ஸ்நானன்.

இப்பேர்ப்பட்ட பண்பாளரின் பாசறையில்தான் அந்திரேயா பாடம் பயின்றார். யோவானுடைய பாதிப்புகள் அந்திரேயாவுக்குள் பதிப்புகளாய் தங்கிவிட்டது. அதனால்தான் தாழ்மையுள்ளவனாய், தகுதியான இடம் தேடாதவனாய் சாகும் வரை சத்தியத்தை அறிவிக்கிறவனாய் அந்திரேயா வாழ்ந்தார்.

அது எப்படி என்பதை அடுத்தடுத்த அதிகாரங்களில் நீங்கள் தெளிவாய் அறிந்து கொள்ளலாம்.

# 3

# ஆவியில் தாகமுள்ள அந்திரேயா

இயேசு கிறிஸ்துவின் சீடர்களில் முதலில் வந்தவர் அந்திரேயா தான் என்று யோவான் நற்செய்தி நூலில் வாசிக்கிறோம். இங்கு ஒரு காரியத்தை நாம் முதலில் அறிய வேண்டும். இயேசு கிறிஸ்து இவரைத் தேடிச் சென்று பெயர் சொல்லி அழைத்தோ, காரியங்களை அறிவித்தோ அந்திரேயாவைத் தம்முடைய சீடராக்கிக் கொள்ளவில்லை. மாறாக அந்திரேயாவே அவரைத் தேடிச் சென்று சீடரானார்.

இது ஒரு சுவாரஸ்யமான கதை. 'பக்தியுள்ளவனை கர்த்தர் தமக்கென்று தெரிந்து கொள்கிறார்' என்பதற்கு நல்ல எடுத்துக்காட்டு அந்திரேயாவின் வாழ்க்கையாகும்.

அவன் சீமோன் பேதுருவின் சகோதரன் என்றும், பெத்சாயிதா ஊரைச் சார்ந்தவன் என்றும் யோவான் முதல் அதிகாரத்தில் மிகத் தெளிவாக எழுதப்பட்டுள்ளது. பெத்சாயிதா என்றால் மீன்பிடி வீடு என்று பொருள். அதாவது மீன்பிடிக்கிற தொழிலே பிரதானமாய் நடக்கிற பெத்சாயிதாவைச் சார்ந்த மீனவக் குடும்பத்தைச் சார்ந்தவர் அந்திரேயா என்பது புலனாகிறது.

வேதத்தை நீங்கள் தெளிவாய் வாசித்தால் பெத்சாயிதா பட்டணத்தில் குடியில்லாமல் அதற்கு 40 கல் தொலைவில் உள்ள பெத்தாபிரா என்னும் இடத்தில் அந்திரேயா குடியிருந்தார் என்பதை புரிந்து கொள்ளுங்கள்.

தொழில் செய்ய வேண்டிய இடத்தை விட்டு தொலைவிடத்தில் அந்திரேயா குடியிருந்ததற்கு பிரதான காரணம் என்ன தெரியுமா? அங்கே தான் யோவான் ஸ்நானன் இருந்தார். யோவானின் பிரசங்கத்தினால் கவரப்பட்டதாலும்,

யோவானுக்கு சீஷராக இருக்க விருப்பப்பட்டதாலும் தனது தொழிலுக்கு ஆதார இடமான பெத்சாயிதாவை விட்டு விட்டு தனது ஆவிக்குரிய வாழ்விற்கு ஆகாரம் தருகிற பெத்தா பிராவை அந்திரேயா தெரிந்து கொண்டார்.

இங்கே விசுவாசிகள் ஒன்றை தெரிந்து கொள்ள வேண்டும். ஒரு செடி வளர்வதற்கே மண் வளமும் சூழ்நிலையும் முக்கியமோ அதைப் போன்றே ஒருவர் ஆவியில் வளர்வதற்கு இடமும் சூழ்நிலையும் சரியாய் இருக்க வேண்டியது அவசியம்.

வேலை, வருவாய், சுகமான வாழ்வு இவைகளுக்கு பிரதான இடம் கொடுத்து விசுவாசிகளின் ஐக்கியத்தை விட சுகவாசிகளின் ஐக்கியத்தை பெரிதாக நினைத்து அவர்கள் மத்தியிலேயே தங்கி விடுவதால் தான் சிலர் சிலகாலம் மட்டும் ஒளியிட்டு பின்னர் சிதைவடைந்து சின்னா பின்னமாகிறார்கள். இப்படித்தான் லோத்து, ஆபிரகாமின் ஐக்கியத்தை விட்டு பிரிந்து போனான். கர்த்தருடைய தோட்டத்தைப் போல் சோதோம் கொமோரா இருப்பதாக நினைத்துக் கொண்டு சோதோமுக்கு எதிரே கூடாரம் போட்டான்.

பிந்தின வசனங்களில் சோதோமின் வாசலை நோக்கி குடியிருந்தான் என எழுதப்பட்டுள்ளது. அதாவது பட்டணத்தின் உயர்ந்த பொறுப்பிலுள்ளவர்கள் குடியிருக்கிற இடம். சுருங்கச் சொல்ல வேண்டுமானால் லோத்து சோதோமில் ஒரு VIP யாக இருந்தான்.

அந்த அந்தஸ்து அவனை வாழ வைத்ததா? வளர வைத்ததா? என்றால் இல்லை என்பது மாத்திரமல்ல அவனை வாட வைத்தது, ஓட வைத்தது, வரள வைத்தது, வீழ வைத்தது என்பது தான் பதில். நீங்கள் உணர்வு பெற வேண்டும் என்று விரும்புகிறேன்.

பெத்சாயிதாவிலேயே அந்திரேயா இருந்திருந்தால் 12



படகு வாங்கியிருக்கலாம். 10 வீடு வாங்கியிருக்கலாம். பணம் பண்ணுவதை விட பக்தி மிஞ்சியிருந்ததினால் தேவனைத் தேடுவதில் ஆவல் கொண்டு தேவனுக்கு அடுத்த காரியங்களில் தாகம் கொண்டு யோவானின் வார்த்தைகளை அதிகம் கேட்பதற்கு வாய்ப்பாக பெத்தாபிராவிற்கு அந்திரேயா குடிபெயர்ந்தான்.

பிரியமானவர்களே! உங்கள் பிள்ளைகள், குடும்பத்தினர் ஆவியில் வளர வேண்டுமா? ஆண்டவருக்குள் நிலைக்க வேண்டுமா? அப்படியானால் கர்த்தரின் ஆலயத்திற்கு செல்வதற்கு, கர்த்தரின் வார்த்தையை, விசுவாசிகளின் ஐக்கியத்தை அதிகம் பெறக்கூடிய இடத்திற்கு உங்கள் குடியிருப்பை (மாற்றி) அமைக்க வேண்டியது அவசியம்.

அந்திரேயா, யோவான் ஸ்நானனின் சீடராகி ஆழ்ந்த சத்தியங்களை அவரிடத்தில் கேட்டு அவரை அழுத்தமாக பின் தொடர்ந்தான். யோவானுடைய செயல்கள், பெரிய ஆச்சர்யத்தை மக்களுக்குக் கொடுத்தது. இவர் மேசியாவா? எலியாவா? தீர்க்கதரிசியா? என்ற பரபரப்பான கேள்வி மக்கள் மத்தியில் எழுந்தது. இப்படிப்பட்ட புரட்சிப்புயலின் சீடராகத்தான் அந்திரேயா இருந்தார்.

ஒருநாள் இயேசு அந்தப் பக்கம் வருவதைக் கண்ட யோவான் ஸ்நானன் ‘இதோ உலகத்தின் பாவத்தை சுமந்து தீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டி’ என்று மொழிந்ததை அந்திரேயா கேட்டு ஆடிப்போனார்.

அடுத்தது என்ன நடந்தது தெரியுமா? இதுவரை தான் பின்தொடர்ந்து வந்த யோவானை விட்டு விட்டு இயேசுவை பின் தொடர ஆரம்பித்தான். தெய்வ ஜனம் இதை சிந்திக்க வேண்டும்.

ஆவிக்குரிய தாகத்தோடு யோவானைப் பின்பற்றிய அந்திரேயா, பாவத்தை சுமந்து தீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டி

இயேசு தான் என்று அறிந்து கொண்டதுடன், பழக்கப்பட்ட பாரம்பரிய பாதையை விட்டு விட்டு பாவ மன்னிப்புக்கு வழி வகுக்கும் புதிய பாதையை தயக்கமின்றி தெரிந்து கொண்டான்.

அடக்கடவுளே! இவ்வளவு நாள் பின்பற்றியதை விட்டு விட்டு எப்படி ஐயா மாறினான் என்றெல்லாம் கேட்கக் கூடாது. நமக்கு சத்தியம் தெரியாத வரை, உபதேசம் புரியாதவரை ஒரு இடத்தில் ஊன்றக் கட்டப்படுவதில் தவறில்லை.

ஆனால் இதுதான் சத்தியம், இதுதான் வசனத்தின் பொருள் என்று தெளிவாக நாம் அறிந்து கொள்கிற வேளை வருகிறபொழுது அவர் எப்பேர்ப்பட்ட யோவானாக இருந்தாலும் அவரை விட்டு விலகி இயேசுவின் வழியில் நடக்க வேண்டியது அவசியம்.

இதில் தாய் சபை, தங்கச்சி சபை என்ற பேச்சுக்கெல்லாம் இடமில்லை. தத்துவம் பேசுவதை விட்டு விட்டு பாவ மன்னிப்பின் நிச்சயத்தைத் தரக்கூடிய, பரலோகம் சேர்க்கக்கூடிய வழியில் நடக்க நம்மை அர்ப்பணிக்க வேண்டும்.

சத்தியத்தில் நடப்பது என்பது லேசான காரியமல்ல. அது போராட்டம் நிறைந்த வாழ்க்கை. உபதேசம் என்பது ஆரம்ப காலத்தின் அதிக எதிர்ப்பையும் விமர்சனத்தையும் பெறுவது என்பது வழக்கமான ஒன்று தான். Telescope -ஐ கண்டுபிடித்த கலிலியோ உலகம் உருண்டை என்று அறிவித்த போது அவரை (கிறிஸ்தவ) மதவாதிகளே மிகவும் துன்புறுத்தினர். ஏனென்றால் உலகம் தட்டையானது என்றுதான் அது வரை எல்லோரும் நினைத்துக் கொண்டிருந்தார்கள். அதன் அடிப்படையிலே எல்லா நாடுகளிலும் எல்லா மதங்களிலும் பல்வேறு கதைகள் பிறந்தன.

உலகம் உருண்டை என்ற சத்தியம் ஆரம்ப காலத்தில் பைத்தியக்காரத்தனமாகவும், நகைப்புக்குரிய ஒன்றாகவும்



இருந்தது. மெல்ல மெல்ல தான் உண்மை உலகிற்கு புரிந்தது. எனவே நீங்கள் சத்தியத்தை தெளிவாய் அறிகிற போது உலகம் உங்களை எந்தவித நகைப்புக்குள்ளாக்கினாலும் தைரியமாக இலக்கை நோக்கி ஓட வேண்டியது அவசியமாகும்.

நெடுநாளாய் கேட்ட சில சத்தியங்கள், குழந்தைப் பருவத்திலே நமக்கு கற்று கொடுக்கப்பட்ட பாடங்கள் நமது உள்ளத்தில் அழுத்தமாக பதிந்து விடுகிறபடியால் சில வேளைகளில் உண்மைகள் கூட மாறுபாடாய் தோன்றுகிறது. சத்தியங்கள் சந்தேகத்திற்குள்ளாகிறது.

மனந்திரும்புதலுக்கேற்ற கனிகளைக் கொடுங்கள் என்று பிரசங்கித்தவனும், பாவ மன்னிப்பின் நிச்சயத்துக்கென்று ஞானஸ்நானம் கொடுத்தவனுமாகிய யோவான் ஸ்நானனுக்கு பின்சென்ற அந்திரேயா யோவானால் அல்ல, இயேசுவினால் மாத்திரமே பாவ மன்னிப்பு உண்டென்று அறிந்து கொண்ட பொழுது, நான் ஏற்கனவே பாவ மன்னிப்பு பெற்று விட்டேன். மனந்திரும்பி விட்டேன் என்ற சித்தாந்தத்தை பேசாமல் மெய்யான வழியாகிய இயேசுவின் வழிக்கு யாருடைய பலவந்தம் இல்லாமல் தானாகவே வந்து விட்டான். இங்கே தான் அந்திரேயாவின் ஆத்தும தாகம் வெளிப்படுகிறது.

இந்தியாவில் மிகச்சிறந்த பிரசங்கியார் ஒருவர் இருக்கிறார். அவரது பேச்சும் எழுத்தும் அதிகக் கூர்மையானது. ஆனால் பரிசுத்த ஆவியைக் குறித்த அவருடைய கருத்து வித்தியாசமானதாக இருந்தது. பரிசுத்த ஆவியானவர் உண்டு. ஆனால் பரிசுத்த ஆவியின் அபிஷேகமோ, அந்நிய பாஷை பேசுதலோ கிடையாது என்று அவர் நம்பினார். அதையே அவர் பிரசங்கித்தார். எழுதியும் வந்தார்.

அந்திரேயாவின் வாழ்க்கையில் ஏற்பட்டது போல இவருடைய வாழ்க்கையிலும் ஒருநாள் பரிசுத்த ஆவியின்

அபிஷேகம் உண்டு அந்நிய பாஷை பேசுகிற அனுபவம் உண்டு என்ற உண்மை அவருக்கு வெளிப்படுத்தப்பட்டது. அதைக் கேட்ட பொழுது அவர் முரண்டு பிடிக்கவில்லை. ஐயகோ, இதுவரை நாம் பிரசங்கித்து வந்தோமே அதை விட்டு நாம் மாறும்பொழுது மக்கள் என்ன நினைப்பார்கள் என்றெல்லாம் அவர் யோசிக்க வில்லை. மாறாக ஆண்டவரே, இப்படிப்பட்ட அனுபவங்கள் இருப்பது உண்மையானால் அதை முதலில் எனக்குத் தாரும் என்று ஜெபம் பண்ணினார். என்ன ஆச்சரியம்! தேவன் அவரைத் தமது ஆவியினால் அபிஷேகித்தார்.

இப்பொழுது அவரது பேச்சிலும் எழுத்திலும் புதிய பொலிவும் புத்தொளியும் வீசுகிறது. அவரது பழைய புத்தகங்களையும் சமீபத்திய புத்தகங்களையும் வாசிக்கும் பொழுது பெரிய வித்தியாசத்தை உணர முடிகிறது.

இப்படிப்பட்ட தேவ மனிதனுக்காக கர்த்தரை துதிக்கிறேன். தேவன் தம்முடைய சித்தத்தையும், சத்தியத்தையும் வகை வகையாகவும், பங்கு பங்காகவும் வெளிப்படுத்துகிறார். நாம் ஒரே இடத்தில் நின்றுவிடக்கூடாது. நடை போடவும், முன்னேறவும் நம்மை அர்ப்பணிக்கிறவர்களாய் இருக்க வேண்டும். உண்மையை அறிந்து கொள்ளுகிற பொழுது தொன்மையை விட்டு வெளியேறவும் தயங்கக்கூடாது. ஆவியில் தாகமுள்ளவர்களுக்கு இஃது சாத்தியமான ஒன்று.

முன்னே செல்லும் இயேசுவைப் பின்தொடர்ந்த அந்திரேயா அவரைப் பார்த்து கேட்ட முதல் கேள்வி கூர்ந்து கவனிக்கப்பட வேண்டிய ஒன்று, ‘‘ரபீ நீர் எங்கே தங்கியிருக்கிறீர்’’ (யோவான் 1 : 38). இந்த அற்புதமான கேள்வி இன்னொரு வருடைய கேள்விக்கு பதிலாக கொடுக்கப்பட்டது தான்.

ஆம். நீங்கள் என்னத்தைத் <u>தேடுகிறீர்கள்?</u> என்று



இயேசு கேட்டதற்கு ரபீ, நீர் எங்கே தங்குகிறீர்? என்று இவர்கள் பதில் சொன்னார்கள்.

அதாவது இயேசு தங்குமிடத்தைத்தான் அந்திரேயா தேடியிருக்கிறார். தேடுதல் என்கிற வேட்கை அந்திரேயாவிற்குள் அதிகமாகவே இருந்தது. அவன் ஆத்துமா மேசியாவை கண்டடைய தேடுதல் வேட்டையை நடத்தியது. அதன் முதற்பகுதிதான் யோவானிடத்தில் வந்து பாவ மன்னிப்புக் கென்று ஞான ஸ்நானம் பெற்று சீடரானது.

அவனது தேடுதல் அஃதோடு நின்று விடவில்லை. அனைவரின் பாவத்தைப் போக்கும் ஆட்டுக்குட்டி இவர்தான் என்று இயேசு அடையாளம் காட்டப்பட்ட போது அவரோடு இருக்க இடம் தேடினான், அவரோடு தங்க வகை தேடினான்.

இந்த இதயத்துடிப்பை இயேசு அறிந்து கொண்டதினால் தான் என்னத்தைத் தேடுகிறீர்களென்று கேட்டார். பூசி மழுப்பாமல், திசை திருப்பாமல் உள்ளம் தேடுகிறதை உள்ளவாறே அந்திரேயா வெளிப்படுத்தினார். ‘‘ரபீ நீர் எங்கே தங்குகிறீர்’’ அற்புதமான கேள்வி. அதற்கு அவர் ‘‘வந்து பார்’’ என்று சொன்னது சூப்பர் பதில்.

நாத்தான் வேல் மாத்திரமல்ல. அந்திரேயாவும், கபடற்ற உத்தம இஸ்ரவேலன் என்று நான் நம்புகிறேன். இப்படிப்பட்ட தேடுதல் உள்ளம் படைத்தவர்களைத்தான் தேவன் தேடுகிறார்.

‘‘தேடுகிறவர்களுக்கு அவர் தென்படுகிறார்’’ என்பதும் ‘‘தேடுகிறவர்களுக்கு தெளிவைத் தருகிறார்’’ என்பதற்கும் அந்திரேயா அற்புதமான சாட்சியாக இருக்கிறார். பிரியமானவர்களே! தேவனைத் தேடுவதற்கு உங்கள் உள்ளத்தை எவ்வளவுக்கதிகமாய் ஒருமுகப்படுத்துகிறீர்களோ, அவ்வளவுக்கதிகமாய் தேவனை அறிந்து கொள்ளவும், புரிந்து கொள்ளவும் நீங்கள் கிருபை பெறுவீர்கள்.

''காலையில் தேடுகிறவன் என்னைக் கண்டடைகிறான்'' என்று வசனம் சொல்கிறது. காலையில் தேடுகிறவர்களுக்கு கர்த்தர் வெளிப்படுவார். மற்ற வேளை தேடுபவர்களுக்கு தென்பட மாட்டார் என்பது இதன் பொருளல்ல. ஒவ்வொரு நாளும் முதல் வேலையாக கர்த்தரைத் தேட வேண்டும் என்பதும், அவரைத் தேடுதலை பிரதானமாக கருத வேண்டும் என்பதே இதன் உள்ளார்ந்த அர்த்தம்.

எந்த மனிதன் கர்த்தருக்கடுத்த காரியங்களை முதன்மைப்படுத்தி, முழு மூச்சுடன் தேடுகிறானோ அவனது வாழ்வில் கிருபா வரங்களும் ஆவியின் கனிகளும் நிறைந்து வழியும் என்பது உண்மை.

சங்கீத புத்தகத்தை தியானம் பண்ணிக் கொண்டிருந்த பொழுது என் மனத்திரையில் ஒரு சிறிய புதிய சிந்தனை ஓட்டம் குறுக்கிட்டது. நூற்றைம்பது சங்கீதங்களும் எவ்வளவு அற்புதமானவைகள்! அதில்தான் தீர்க்க தரிசனங்கள், வாக்குத் தத்தங்கள் என்று எத்தனை சிறப்பு அம்சங்கள்!

இப்படிப்பட்ட சிறப்பு மிக்க இந்தப் புத்தகத்தின் முதல் சங்கீதத்தில் முதல் வார்த்தையைப் பாருங்கள். **'துன்மார்க்கர்'** என்ற வார்த்தையை விட ஒரு நல்ல வார்த்தையில் ஆரம்பித்திருக்கலாமே ? என்ற ஆதங்கம் என் மனத்திரையில் மின்னியது.

துன்மார்க்கரின் ஆலோசனை பாவிகளின் வழி, பரியாசக்காரர் உட்காரும் இடம் என்ற வார்த்தைக்கெல்லாம் மிக நுட்பமாக ஆய்வு செய்வோமென்றால் பேரூந்தில் கூட ஏற முடியாது, பெரு நகரிலும் வாழ முடியாது. இப்படி வாழ்வதென்பது சாத்தியமில்லாத ஒன்று.

அடுத்த வசனத்தைக் கவனியுங்கள். இரவும், பகலும் வேதத்தில் தியானமாய் இருக்கிற மனுஷன் பாக்கியவான். 24 மணி நேரமும் வேத வசனத்தை தியானம் பண்ணிக் கொண்டிருப்பது என்பது நடக்கின்ற காரியமா ?



எட்டு மணி நேரம் தூக்கம். எட்டு மணி நேரம் படிப்பு அல்லது வேலை, இரண்டு மணி நேரம் பயணம், இரண்டு மணி நேரம் குளியல், ஆயத்தம், சொந்த வேலை என்று நேர ஒதுக்கீடு செய்து கொண்டே வந்தால் கடைசியில் ஒன்று அல்லது இரண்டு மணி நேரம் தியானத்திற்கு மிஞ்சும் என்பது உண்மை.

எனவே, இரவும் பகலும் வேத வசனத்தில் தியானமாயிருப்பதென்பது சாத்தியமற்ற ஒன்று.

முதலாம் சங்கீதத்தைக் குறித்து இதுவரை நீங்கள் வாசித்ததெல்லாம், மனித மூளையில் பிறந்த லாஜிக், இதை நமக்கு அருளின பரிசுத்த ஆவியானவர் என்பதை ஆராய்ந்தறிதல் வேண்டும். எந்த இடத்தில், எந்த மனிதரின் மத்தியில், எந்த நிலையில், எந்த நேரத்தில் நாம் இருந்தாலும் தேவனுடைய வசனத்தை நேசித்து அதன்படி நடக்க நினைவை அடக்க வேண்டும் என்பதுதான் இதன் பொருள்.

இப்படி தேவ வசனத்தை நிறைவேற்ற 'தேடுதல்' (தியானம்) எந்த மனிதனுக்குள் இருக்கிறதோ அவனுக்கென்று பிரத்யேகமான ஆசீர்வாதங்களை தேவன் வைத்திருக்கிறார்.

★அவன் நீர்க்கால்களின் ஓரமாய் நடப்பட்டவன் (பசுமை)
★ கனி கொடுப்பவன் (கொழுமை)
★ இலையுதிராதிருக்கிற மரம் (செழுமை)
★ செய்வதெல்லாம் வாய்க்கும் (மகிமை)

இப்படிப்பட்ட ஆசீர்வாதங்களை நீங்கள் அடைய வேண்டும் என்பதே எனது வாஞ்சை.

அட! நீங்க வேற, குடும்ப சூழ்நிலையில் இருக்கிற வேலையின் மத்தியில் இதற்கெல்லாம் நேரம் எப்படி இருக்கும் ? இதெல்லாம் முழு நேரமாக ஊழியத்தில் இருப்பவர்களுக்குத் தான் சரிப்பட்டு வரும் என்று நீங்கள் புலம்புவது எனக்குப் புரிகிறது.

அந்திரேயாவின் வாழ்க்கையை உன்னிப்பாய் கவனித்துப் பாருங்கள். அவர் யோவானுக்கு சீஷனாக இருந்த போதும், யோவானை விட்டு விட்டு இயேசுவுக்கு சீஷனாக மாறின

போதும் அவர் ‘தனிக்கட்டையல்ல’, ‘சந்நியாசியுமல்ல’. அவருக்கு வீடு இருந்தது (மாற்கு 1:29). அவனுக்கு குடும்பத்தார் இருந்தார்கள். இதற்கு மேலாக பிழைப்புக்காக மீன் பிடிக்கிற வேலையும் இருந்தது.

இவைகளெல்லாவற்றின் மத்தியிலும்தான் இயேசுவுக்கு சீஷனாக, இயேசுவோடு தங்குபவனாக, மேசியாவைக் குறித்து சாட்சி பகர்பவனாக அந்திரேயா திகழ்ந்தார்.

நீங்கள் இங்கே ஒன்றைக் கவனிக்க வேண்டும். ஆரம்ப காலத்தில் அவன் வேலை செய்து கொண்டேதான் இயேசுவுக்கு சீஷனாக இருந்தான். சில காலத்திற்குப் பின்பு இயேசு தம்மோடு இருக்கும்படி திட்டமாய் அழைத்த போதுதான் முழு நேர சீடராக வந்தான். இவரைப் போல் பலர் சீடராக வந்தனர்.

சில காலத்திற்குப் பின்பு அவர்களில் பன்னிருவரை இயேசு தேர்ந்தெடுத்து ‘அப்போஸ்தலர்’ என்று பேரிட்டார். அப்படித் தேர்வு செய்யப்பட்டவர்களில் ஒருவன்தான் இந்த அந்திரேயா.

நான் என்ன சொல்ல வருகிறேன் என்பதை நீங்கள் புரிந்து கொண்டிருப்பீர்கள் என்று நம்புகிறேன். உங்களைக் குறித்து மிகப் பெரிய திட்டம் தேவனுக்கு உண்டு என்பது உண்மைதான். ஆனால், அந்த திட்டத்தை ‘படார்’ என்று தேவன் சடிதியில் நிறைவேற்றி விட மாட்டார்.

உங்களுடைய தேடுதலின் அளவைப் பொறுத்தே அவரின் திட்டம் நிறைவேறுதலின் வேகமும் இருக்கும். எனவே, பிரியமானவர்களே உங்கள் அழைப்பையும், தெரிந்து கொள்ளுதலையும் உறுதிப்படுத்திக் கொண்டு, தேவ திட்டத்தை, தேவ சித்தத்தை அறிய ஆவல் கொண்டு தேடுதல் சிந்தையோடு நீங்கள் செயல்பட வேண்டியது அவசியம்.

உங்கள் குடும்பம், வேலை இவைகள் மத்தியில் இருந்து கொண்டே உங்களுக்கென்று தேவன் வைத்திருக்கிற ஊழியத்தை, உக்கிரானுத்துவத்தை உண்மையாய் நிறைவேற்றுங்கள். அப்பொழுது அந்தந்த வேளையில்



அந்தந்த வேலையை சரியாய் செய்ய தேவன் உங்களைப் பலப்படுத்துவார். பயன்படுத்துவார்.

தேடுதல் என்கிற கனல் ஆரம்பத்தில் மாத்திரமல்ல. அந்திரேயாவிற்குள் தொடர்ந்து சுடர் விட்டது என்பது குறிப்பிடத்தக்கது. இயேசு கிறிஸ்துவோடு மூன்றரை ஆண்டு காலம் அப்போஸ்தலராக கூடவே பலர் சென்றார்கள். பல காரியங்களை இயேசு அவர்களுக்கு உபதேசம் பண்ணினார்.

பேதுரு, யாக்கோபு, யோவான் எப்பொழுதும் அவருக்கு நெருக்கமாக இருந்தார்கள். அவர்கள் ஒரு நாளும் இயேசுவினிடத்தில் ஆராய்ச்சிக்குரிய கேள்வி கேட்டதே கிடையாது.

மத்தேயு 24:3-ல் சீஷர்கள் அவரிடத்தில் வந்து ‘உம்முடைய வருகைக்கும், இந்த உலகத்தின் முடிவுக்கும் அடையாளம் என்ன? அதை நீர் எங்களுக்கு சொல்ல வேண்டும்’ என்று கேட்டார்கள் என வாசித்த பொழுது எனக்குள் பளிச்சென்று இன்னொரு கேள்வி எழும்பியது.

ஆராய்ச்சிக்குரிய கேள்விகளை ஒரு நாளும் கேட்டறியாத பேதுரு, யாக்கோபு, யோவான் இந்த கேள்வியை எப்படிக் கேட்டார்கள். இவர்களைத் தவிர ஒலிவ மலைக்கு இவர்களோடே வேறு எந்த சீஷன் உடன் சென்றிருப்பான்?

எனது இந்த தேடுதலுக்கு உடனே பதில் கிடைத்து விட்டது. மாற் 13: 3, 4-ஐ வாசித்துப் பாருங்கள்.

பின்பு அவர் தேவாலயத்துக்கு எதிராக ஒலிவ மலையின் மேல் உட்கார்ந்திருக்கையில் பேதுருவும், யாக்கோபும், யோவானும், அந்திரேயாவும் அவரிடத்தில் தனித்து வந்து, இவைகள் எப்பொழுது சம்பவிக்கும்? இவைகள் எல்லாம் நிறைவேறும் காலத்துக்கு அடையாளம் என்ன ? எங்களுக்கு சொல்ல வேண்டும் என்றார்கள்.

இப்பொழுது புரிகிறதா ? இந்தக் கேள்வியின் சூத்திரதாரியே அந்திரேயாதான் என்று. ஆம், ஆரம்பத்தில் எங்கே தங்குகிறீர் ? என்று தேட ஆரம்பித்த அந்திரேயா

இப்பொழுது அவர் வருகையைக் குறித்து தேட ஆரம்பித்து விட்டார்.

ஆரம்பத்தில் எப்படி அன்போடு இயேசு பதிலளித்தாரோ அப்படியே இப்பொழுதும் இயேசு அன்போடும், அதிகாரத்தோடும் அடையாளங்களை அடுக்கடுக்காய் எடுத்துரைத்தார்.

இன்றைக்கும் நமது வாழ்க்கையில் இப்படிப்பட்ட தேடுதல் வேட்கை அவசியம். ஆண்டவர் என்னோடு பேச வேண்டும். அவருடைய வெளிப்பாடுகளை நான் அறிந்து கொள்ள வேண்டும், அவரின் வசனத்தின் ஆழத்தை புரிந்து கொள்ள வேண்டும் என்கிற ஆசை உங்களுக்குப் பெருக வேண்டும்.

கிணறு தோண்டுகிறவன் தண்ணீர் கிடைக்காதா ? என்ற ஏக்கத்தோடும், ஊக்கத்தோடும் பூமியைத் தோண்டுவது போல வேத வசனத்தில் மறைந்து கிடக்கும் புதையலை நாம் கற்றுக் கொள்ள வேண்டும். பெற்றுக் கொள்ள வேண்டும் என்று நீங்கள் வாஞ்சிக்க வேண்டும்.

இப்படிப்பட்ட தாகத்தோடு, வேகத்தோடு ஞாயிறு ஆராதனைக்கு சென்று பாருங்கள். திருவசனத்தால், தீர்க்க தரிசனத்தால் திருப்தி அடைந்தவர்களாய் திரும்புவீர்கள்.

அந்திரேயா ஆரம்பத்தில் மிகச் சாதாரணமானவன். ஆனால், அவனே இயேசுவின் ஆதி சீஷன். அவன் ஒரு அப்போஸ்தலன். இந்த மேன்மைக்கு காரணம் அவனது ஆவிக்குரிய தாகம். அந்த தாகம் உங்களுக்குள் இருக்குமேயானால் உங்களையும் அசாத்தியமான மனிதனாக மாற்ற தேவன் வல்லவராய் இருக்கிறார்.

இருக்கும் நிலையில் அமிழ்ந்து விடாமல் அவர் மேல் தாகமாயிருங்கள். அற்புதங்களும், ஆசீர்வாதங்களும் உங்களைத் தேடி வரும்.

# 4

# ஆத்தும ஆதாயகனாகிய அந்திரேயா

‘இழந்து போனதைத் தேடவும் இரட்சிக்கவுமே மனுஷ குமாரன் வந்திருக்கிறார்’ என்பது இயேசுவின் வாய்மொழி - இதயத்துடிப்பு.

இந்த இயேசுவானவர் ஒரு மனிதனுக்குள் வருகிற பொழுது அவனும் இழந்து போனவைகளைத் தேடுகிறவனா கவும், அவைகளை இரட்சிப்பிற்குள் நடத்துகிறவனாகவும் மாறி விடுகிறான். இந்த அற்புதமான அனுபவம் அந்திரேயாவின் வாழ்க்கையில் நம்மால் காண முடியும்.

இயேசுவைத் தனது குருவாக ஏற்றுக் கொண்ட அடுத்த நாளே ‘அவர்தான் மேசியா’ என்று சாட்சி சொல்ல ஆரம்பித்தது மாத்திரமல்ல அவரிடத்திற்கு ஆத்துமாக்களை அழைத்துக் கொண்டு வந்ததுதான் தனிச் சிறப்பு.

ஆத்துமாக்களை ஆதாயம் செய்கிறவன் ஞானவான் என்று நீதி மொழிகள் 11 : 30 - ல் சொல்லப்பட்டுள்ளது. இந்த வசனத்தின் அடிப்படையில் அந்திரேயா ஞானவான் என்று நிரூபணமாகிறார். தொழில் ரீதியாக மீனவனாக இருந்தாலும் இயேசுவின் மாணவனாக மாறிய அடுத்த நாளே ஆத்தும ஆதாயகனாக மாறியது தனிச் சிறப்பு.

இயேசுவை கண்டு கொண்டவன், இயேசுவிடம் கற்றுக் கொண்டவன் அஃதினை தனக்குள் அடக்கி வைத்து விட முடியாது. அதனை மற்றவரிடத்தில் பகிர்ந்தளிக்கும் வரை மனம் பதைபதைத்துக் கொண்டிருக்கும்.

அந்திரேயாவின் வாழ்வை கவனித்துப் பாருங்கள். முதலாவது அவன் சகோதரனாகிய சீமோனிடம் (யோவா 1 : 41) இயேசுவை அறிவித்தது குறிப்பிட வேண்டிய அம்சமாக

இருந்தாலும் இதை விட கூர்ந்து கவனிக்க வேண்டிய ஒரு வார்த்தை இந்த வேத பகுதியில் உள்ளது. முதலாவது என்ற வார்த்தையை சிந்தித்துப் பாருங்கள். இயேசுவை ஏற்றுக் கொண்ட ஒரு மனிதன் செய்ய வேண்டிய 'முதலாவது' காரியம் கிறிஸ்துவை மற்றவர்களுக்கு அறிமுகப்படுத்துவது.

இப்படிப்பட்ட செயலை பலருடைய வாழ்க்கையில் நம்மால் காண முடியும். சமாரிய ஸ்திரீ உடனே ஊருக்குள் ஓடிச் சென்று மேசியாவை அறிவித்தாள் என்றும், பவுல் **தாமதமின்றி** கிறிஸ்துவை பிரசங்கித்தான் என்றும் வேதத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

இரட்சிக்கப்பட்ட ஒரு விசுவாசியின் முதல் கடமையே அவரின் நற்செய்தியை அறிவித்து ஆத்துமாக்களை ஆதாயம் செய்வதுதான். உயிர்த்தெழுந்த இயேசு கிறிஸ்துவின் பெரிய கட்டளையை கவனித்துப் பாருங்கள். நீங்கள் புறப்பட்டுப் போய் சுவிசேஷத்தை அறிவித்து ...... சீஷராக்குங்கள். (மத் 28 : 18).

அந்திரேயா இந்த வேலையை மிகச் சிறப்பாகச் செய்தார். இயேசுவுக்குள்ளிருந்த தாகமும், வேகமும் அந்திரேயாவை பற்றிக் கொண்டதென்பது உண்மை. அதனால்தான் அவர் மிகச் சிறந்த ஆத்தும ஆதாயகராக இருந்தார். இந்தக் கனிவும், கசிவும் அந்திரேயாவிற்குள் எப்படி வந்தது தெரியுமா ? யோவா 1 : 39, 40 வசனங்களை வாசித்துப் பாருங்கள். அந்திரேயா இயேசுவை குருவாக ஏற்றுக் கொண்டது மாத்திரமல்ல 'அங்கு அவரோடு தங்கினார்' என்று வேதம் சொல்கிறது.

இயேசுவின் சமூகத்தில், பிரசங்கத்தில் எந்தவொரு மனுஷன் தங்குகிறானோ – காத்திருக்கிறானோ அவனே மிகச் சிறந்த ஆத்தும ஆதாயகனாக மாறுகிறான்.

பாட்டுப் பாடுவதினாலோ, பல சாட்சிகளை கேட்பதினாலோ, ஆத்தும ஆதாயம் செய்ய கிருபை தாரும் என்று ஜெபிப்பதினாலோ ஒரு மனிதன் ஆத்தும ஆதாயகனாக மாறி விட முடியாது.



இயேசுவின் இருதயத்தை, இருதயத் துடிப்பை எந்த ஒரு மனிதன் அறிந்து கொள்கிறானோ, – புரிந்து கொள்கிறானோ அவனே ஆத்தும ஆதாயகனாக மாறுகிறான்.

இயேசுவோடு தங்கியிருந்த அனுபவம் அந்திரேயாவுக்கு புதிய ஞானத்தைக் கொடுத்தது. ஆத்துமாக்களை ஆதாயப்படுத்த ஆயத்தத்தை கொடுத்தது.

அதன் விளைவாக அவன் சகோதரனாகிய பேதுருவை சந்தித்தான், சாட்சியை அறிவித்தான், அன்பரிடம் வர அழைத்தான், இறுதியில் அவன் முயற்சியில் ஜெயித்தான்.

அந்திரேயாவின் முதல் முயற்சியே மிகப் பெரிய வெற்றியாக அமைந்தது. இதை நாம் ஒரு பாடமாக கற்றுக் கொள்வோம். அநேகர் ஆண்டுக்கணக்காய் முயற்சி செய்து ஒரு ஆத்துமாவைக் கூட ஆதாயம் செய்ய முடியாமல் தோற்றுப் போகிறார்கள். கடைசியில், இரட்சிப்பு கர்த்தருடையது அவர் பார்த்துக் கொள்வார் என்று அமைதியாகி விடுகிறார்கள்.

ஆத்துமாக்களை ஆதாயம் செய்ய விரும்புவோரே நீங்கள் அங்கும் இங்கும் ஓடுவதை விட, ஐந்து மைல் ஆறு மைல் என்று பயணிப்பதை விட ஆத்தும ஆதாயப் பணியில் உங்கள் சொந்தக் குடும்ப அங்கத்தினர் மத்தியில் ஆரம்பியுங்கள்.

அது எளிதான ஒன்று என்று சொல்லி விட முடியாது. அதே நேரத்தில் கடினமான ஒன்று என்று சொல்லவும் முடியாது. குழப்புகிறேன் என்று நினைக்காதீர்கள். நம்முடைய இரட்சிப்பு திடமானதாகவும், நம்முடைய வாழ்க்கையின் மாற்றம் நிஜமானதாகவும் இருக்கும் பட்சத்தில் குடும்பத்தினர் மத்தியில் ஆத்தும ஆதாயப்பணி செய்வதென்பது சாத்தியமானதே.

அந்திரேயா அவன் சகோதரனாகிய சீமோன் பேதுருவைக் கண்டு 'மேசியாவைக் கண்டோம்' என்று அறிவித்தான்.

இந்தப் பேதுரு சாதாரணமான ஆள் அல்ல. வேதாகமத்தை வாசித்துப் பார்த்தால் பேதுருவுக்கென்றே சில அழுத்தமான குணாதிசயங்கள் இருக்கிறதை அறிய முடியும்.

1. அவன் ஒரு முரடன், ஒரே சீவு சீவி விடுவான். (உங்க காது பத்திரம்)

2. சுய நம்பிக்கை உள்ளவன் (எவன் மறுதலித்தாலும் நான் மறுதலிக்க மாட்டேன்)

3. துணிச்சல் மிக்கவன் (முந்தி கல்லரைக்குள் நுழைந்தவன்)

இப்படி பல முகங்கள் இந்தப் பேதுருவுக்கு உண்டு. இப்படிப்பட்ட ஒரு நபருக்கு ஒரு காரியத்தைச் சொல்லி இசைய வைப்பதென்பது அவ்வளவு எளிதான காரியமல்ல. இல்லாத Logic கெல்லாம் பேசக் கூடியவர் இந்தப் பேதுரு.

ஆனால், முதல் முயற்சியிலேயே அந்திரேயா அவரை அசைத்து விட்டார். ஆண்டவரிடம் அழைத்துக் கொண்டு வந்து விட்டார். இவரெல்லாம் எங்கே இரட்சிக்கப்படுவார், இவருக்கு எப்படி புரிய வைப்பது என்று நீங்கள் சங்கடப்படக் கூடாது, சந்தேகப்படவும் கூடாது.

நம்முடைய எந்த வார்த்தைக்கும் நேரடியாக ஒரு மனிதனின் இருதயத்திற்குள் நுழைந்து விடாது, காரணம் அது அடைக்கப்பட்டிருக்கிறது.

கர்த்தர் லீதியாளின் இருதயத்தை திறந்தார் (அப் 16:14) என்று எழுதியிருக்கிறபடி நாம் வசனத்தை சொல்ல ஆரம்பிக்கிற பொழுது கர்த்தர் இருதயத்தை திறக்க ஆரம்பிக்கிறார், அப்புறமென்ன அந்த ஆத்துமா அடுத்த நிமிடமே கிறிஸ்துவின் சொத்தாய் மாறி விடுகிறது.



அந்திரேயாவைப் போல் உங்கள் ஆத்தும ஆதாயப் பணியை உங்கள் குடும்பத்தில் துவங்குங்கள். குடும்பம் மிகவும் முக்கியமான ஒன்று. நம் சொந்தக் குடும்ப இரட்சிப்பைக் குறித்து நமக்கே அக்கரை இல்லையென்றால் வேறு யாருக்கு விசேஷித்த அக்கரை பிறக்கும் எண்ணிப் பாருங்கள்.

குடும்பத்தில் இருந்து ஆரம்பிப்பதுதான் ஆத்தும ஆதாயப் பணியின் வெற்றி. அப்போஸ்தலர் 1: 8 – ஐ வாசித்துப் பாருங்கள். பரிசுத்தாவி வரும் போது .......... எருசலேமிலும், (வீடு) யூதேயாவிலும் (ஊர்) 'சமாரியாவிலும் (அடுத்த பகுதி), உலகத்தின் கடைசிப் பரியந்தம் (தூரப் பகுதிகள்) என்று இயேசுவே அழகாக வரிசைப்படுத்தியிருக்கிறார்.

இந்த ஒழுங்கின்படி ஆத்தும ஆதாயப் பணியில் ஆர்வம் காட்டுவோமானால் நிச்சயம் வெற்றி பெறுவோம். இந்த விஷயத்தில்தான் அநேகர் தவறி விடுகிறீர்கள். இந்த வரிசையை தலைகீழாக மாற்றி குடும்பத்தைப் பின்னாக தள்ளி விட்டு வெளிநாட்டையும், வெளி ஊரையும் முக்கியப்படுத்துகின்றனர். சொந்தக் குடும்பத்தாருக்கு நற்செய்தி அறிவிக்காதவர்களையும், அவர்களின் ஆத்தும ஆதாயத்திற்கு முயற்சி எடுக்காதவர் களையும் கொஞ்சம் அதிகமாகவே கர்த்தர் கணக்குக் கேட்பார் என்று நினைக்கிறேன்.

வேதத்திலே இரண்டு பகுதிகள் என் நினைவுக்கு வருகிறது. ஒன்று நெகிழ்ச்சியானது, மற்றொன்று நெருடலானது.

அப்போஸ்தல நடபடிகள் பத்தாம் அதிகாரத்தில் பட்டாளத்து அதிகாரியாகிய கொர்நேலியு என்கிற மனிதரைக் குறித்து வாசிக்கிறோம். அவன் தன் வீட்டாரையும், உறவினரையும் வீட்டிற்குள் அமர வைத்து பேதுருவை வரவழைத்து பிரசங்கிக்க வைத்தார்.

என்ன ஆச்சரியம்! கூடியிருந்த அத்தனை பேர்

மேலேயும் பரிசுத்த ஆவியானவர் இறங்கினார். அவர்கள் அனைவரும் ஞானஸ்நானம் பெற்றார்கள்.

குடும்பத்தினரின் இரட்சிப்பைக் குறித்து கரிசனையுள்ள ஒரு மனிதன் வீட்டில்தான் புதிய ஏற்பாட்டின் புற ஜாதிகளின் சபை துவங்கியது. ஆம் பிரியமானவர்களே! குடும்பத்தினரைக் குறித்த பாரம் உங்களுக்கு இருக்குமானால் புதிய புதிய ஆசீர்வாதங்களை அரிய பெரிய அனுபவங்களையும் உங்கள் வாழ்வில் காண்பீர்கள்.

ஐசுவரியன், லாசரு நிகழ்வு எல்லோரும் அறிந்த வேத பகுதியே. ஐசுவரியவான் பாதாளத்தில் வேதனைப்படுகிற பொழுது கதறிய வார்த்தையயை சற்று கவனித்துப் பாருங்கள். ...... தகப்பனே எனக்கு ஐந்து பேர் சகோதரருண்டு. அவர்களும் வேதனையுள்ள இந்த இடத்திற்கு வராதபடி அவன் போய் அவர்களுக்கு சாட்சியாக அறிவிக்கும் பொருட்டு, நீர் அவனை என் தகப்பன் வீட்டுக்கு அனுப்பும் படி உம்மை வேண்டிக் கொள்கிறேன் என்றான் (லூக் 16 : 27 - 31)

குணப்படாத ஒரு மனிதனின் குமுறலைக் கேளுங்கள். தன் சகோதரர்கள் ஆக்கினை அடையக் கூடாது என்று ஆசைப்பட்டான் - ஆதங்கப்பட்டான். சொந்த சகோதரன் மேல் குணப்படாதவனுக்கு உள்ள அக்கரை கூட இரட்சிக்கப்பட்டவர் களுக்குக்கு இல்லையே, அதுதான் எனக்கு பெரிய நெருடலாக இருக்கிறது.

என் அன்பு வாசகரே ! நீங்கள் கிறிஸ்துவை அறிந்து எத்தனை ஆண்டுகள் ஆகிறது. உங்கள் சொந்த சகோதரர்கள், ஒன்று விட்ட சகோதரர்கள் இரட்சிக்கப்பட்டு விட்டார்களா ? ஆம் என்றால் கர்த்தருக்கு ஸ்தோத்திரம். இல்லையென்றால் நீங்கள் கர்த்தருக்கு கணக்கு சொல்ல வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறீர்கள், மறந்து விடாதீர்கள்.



சபையில் பல முக்கிய பங்குகள் வகிக்கலாம், உங்கள் வீட்டில் பராமரிப்புக் குழு கூடலாம், நீங்கள் ஊழியமும் செய்யலாம். அவைகளை விட உங்கள் குடும்பத்தாரின் இரட்சிப்புக்கு நீங்கள் எடுக்கிற பிரயாசம்தான் அதிக முக்கியம்.

அவர்களெல்லாம் இரட்சிக்கப்பட மாட்டார்கள் என்று கதை சொல்லக் கூடாது. அவர்கள் இரட்சிக்கப்பட நீங்கள் என்ன பிரயாசப்பட்டீர்கள் என்று கணக்கு சொல்லுங்கள் பார்ப்போம்.

அந்திரேயா முதலாவது இயேசுவைக் குறித்து பேதுருவுக்கு அறிவித்து, அவனை இயேசுவுக்குள்ளாக ஆக்கினது போல முதலாவது உங்கள் குடும்பத்திற்காக நீங்கள் ஏதாவது செய்ய வேண்டும்.

கொர்நேலியுவைப் போல ஒரு குடும்பக் கூடுகையை உண்டாக்குங்கள். கேளிக்கையை மையமாக வைத்தல்ல, பாரத்துடனும், பக்தி வினையத்துடனும் அது கூட்டப்பட வேண்டும். அதில் நீங்களே உங்கள் சாட்சியை பகிர்ந்து கொள்ளலாம், அல்லது பாரத்துடன் நற்செய்தியை அறிவிக்கக் கூடிய நபரையும் நீங்கள் அழைக்கலாம். நீங்கள் முயற்சி செய்யுங்கள், விளையச் செய்கிற கர்த்தர் நிச்சயம் பதில் அளிப்பார்.

அந்திரேயா எவ்வளவு பெரிய உழியத்தை செய்தார் என்றோ, எத்தனை பெரிய அற்புதங்கள் நிகழ்த்தினார் என்றோ அப்போஸ்தல நடபடிகளில் பதிவு செய்யப்படவில்லையென்பது உண்மையானாலும், அப்போஸ்தல நடபடிகளைப் படித்த எனக்கு அளவில்லா மகிழ்ச்சி ஆறாய் பெருக்கெடுத்து ஒடியது. காரணம் ஆதி சபையை நிறுவ முதல் பிரசங்கம் செய்தது பேதுரு.

புற ஜாதிகளின் சபை தோன்ற பிரசங்கம் செய்தது, பேதுரு, அஃதோடு மாத்திரமல்ல மரித்தோரை உயிரோடு

எழுப்பினது உட்பட எத்தனை அற்புதங்களை நிகழ்த்தினார் இந்தப் பேதுரு.

அந்திரேயா என்ற ஒற்றை மனிதன் அன்றைக்கு பேதுருவை ஆதாயப்படுத்தியதினால் புதிய ஏற்பாட்டுச் சபைக்கு மிகப் பெரிய சொத்தாகிய பேதுரு கிடைத்தார்.

பிரியமானவர்களே! உங்களுக்கு வாய்ப்புகள் இல்லாமல் போகலாம். வரவேற்புகள் கிட்டாமல் போகலாம். ஆனால், உங்கள் மூலம் கிறிஸ்துவுக்குள் நடத்தப்படுகிற ஆத்துமாக்கள் வல்லமையாய் பிரகாசிப்பது, எத்தனை பாக்கியம் – சிலாக்கியம்.

எனவே, எவரையும் அலட்சியமாய் எண்ணாமல் அந்த ஆத்துமாவை ஆதாயம் பண்ண அக்கரை எடுத்துக் கொள்ளுங்கள்.

என்னுடைய சரீரத்தில் பலவீனங்கள், சுகவீனங்கள் எத்தனையோ இருந்தாலும் அவைகளின் மத்தியில் நான் மகிழ்ச்சியாய் இருக்கிறேன். காரணம், என்னால் கர்த்தருக்குள் நடத்தப்பட்டவர்கள் பரவலாக ஆங்காங்கே ஆத்தும ஆதாயகர்களாய் திருச்சபைப் போதகர்களாய் ஆவிக்குரிய ஸ்தாபனத் தலைவர்களாய் உழைத்துக் கொண்டிருக்கிறார்கள் – ஜொலித்துக் கொண்டிருக்கிறார்கள்.

அவர்களில் பலரை நினைத்துப் பார்க்கும் பொழுது ஆச்சரியமாய் இருக்கிறது. போதிய கல்வியறிவு இல்லாதவர்கள், உலக வேலையையே ஒழுங்காய் செய்ய முடியாதவர்கள். ஆனால், அப்படிப்பட்டவர்கள் பிரசங்கத்திலும், ஊழியத்திலும் என்ன போடு போடுகிறார்கள்.

அவர்களை அன்றைக்கு அலட்சியம் செய்திருப்பேனானால் நான் எவ்வளவு பெரிய குற்றவாளியாய் இருப்பேன். அன்றைக்கு அன்பு பாராட்டி ஆத்தும தாகத்தோடு



ஆதாயப்படுத்தி ஆயத்தப்படுத்தியதினால் இன்று பேதுருக் களாய் எழும்பி நிற்கிறார்கள்.

இதை நீங்கள் ஞாபகத்தில் வைத்துக் கொள்ளுங்கள். உங்களால் ஆதாயப்படுத்தப்படுகிறவர்கள் உலகத்தை கலக்குகிறவர்களாய், உலக சுவிசேஷர்களாய் எழும்பலாம். அப்படிப்பட்டவர்களை எழுப்ப தேவன் உங்களை பயன் படுத்தலாம்.

அந்திரேயாவைப் போல் ஆண்டவர் சமூகத்தில் தங்குங்கள். அவருடைய இதயத் துடிப்பைப் புரிந்து கொள் ளுங்கள், அவருக்காய் பேசுங்கள், அவரைப் பற்றிப் பேசுங்கள். அன்புக்குரிய குடும்பத்தாரை அருகிலிருக்கும் நண்பர்களை ஆதாயப்படுத்துங்கள்.

நீங்கள் செய்ய முடியாததை, நீங்கள் கிறிஸ்துவுக்குள் நடத்தினவர்கள் செய்வார்கள். தேவனுடைய இராஜ்யத்தின் எல்லை விரிவாகும், அதில் உங்கள் பிரயாசமே வித்தாகும்.

# 5

# அரும்புகளின் நண்பர் அந்திரேயா

நான்கு சுவிசேஷங்களிலும் விபரமாக பதிவு செய்யப்பட்ட அற்புதமிது. இயேசுவின் சுவிசேஷத்தை சொல்லும் எவரும் மேற்கோள் காட்டும் பகுதியிது. ஞாயிறு பள்ளியில் முதலில் சொல்லித் தரும் பாடமிது - அது எது ? என்று உங்களைக் கேட்டால் சற்றும் தாமதியாமல் ஐந்து அப்பம் இரண்டு மீனை அற்புதமாய் ஐயாயிரம் பேருக்கு இயேசு பங்கிட்டாரே அதுதான் என்று நீங்கள் சொல்லி விடுவீர்கள் என்று எனக்குத் தெரியும்.

முதல் மூன்று சுவிசேஷத்தில் சொல்லப்படாத பல நுணுக்கமான அம்சங்களை யோவான் பதிவு செய்திருப்பது குறிப்பிடத்தக்கது.

சீஷருடைய மன நிலையைப் பாருங்கள். சாயங்காலம் ஆகி விட்டது. - வெகு நேரம் சென்று விட்டது, நம்மிடத்தில் ஒன்றுமில்லை. அப்பங்களை வாங்கிக் கொள்ள ஜனங்களை அனுப்பிவிட வேண்டும். இதுதான் அவர்களின் மனதின் வெளிப்பாடு. ஆனால், இயேசுவின் செயலைப் பாருங்கள் நீங்களே அவர்களுக்கு ஆகாரம் கொடுங்கள்.

இந்த வனாந்தரத்தில் அற்புதம் செய்ய வேண்டுமென்று இயேசு தீர்மானித்து விட்டார் என்பது உண்மை என்பதை யோவான் 6-ஆம் அதிகாரத்தை வாசித்தால் உங்களால் தெளிவாகப் புரிந்து கொள்ள முடியும்.

தாம் செய்யப் போவதை அறிந்திருந்தபடியால் பிலிப்புவை (சீஷர்களை) சோதிக்கும்படி இவர்களுக்கு கொடுக்கும்படி ஆகாரத்தை எங்கே கொள்ளலாம் ? என்று இயேசு கேட்டார் என யோவான் பதிவு செய்துள்ளார். இந்த சோதனையில் அந்திரேயாவைத் தவிர ஒருவரும் தேர்ச்சி



பெறவில்லை.

200 பணத்துக்கு வாங்கினாலும் போதாதே - இது இராத்திரி நேரமாயிற்றே. இப்படி ஏகப்பட்ட எதிர் மறையான அறிக்கைகள் சீஷரிடத்திலிருந்து வந்தது.

'இங்கே ஒரு பையன்' இருக்கிறான் அவன் கையில் ஐந்து அப்பமும் இரண்டு மீன்களும் உண்டு என்று அந்திரேயா இயேசுவிடம் துணிந்து சொன்னான்.

புருஷர் மந்திரம் ஐயாயிரம் பேர் என்றால் சிறுவர், பெண்கள் ஆகியோரைக் கூட்டிச் சேர்த்தால் - 5,000க்கு மேல் 10,000 வரை ஜனத்திரள் இருந்திருக்கும்.

இவ்வளவு பெரிய கூட்டத்திற்கு ஆகாரம் கொடுக்க திட்டம் போடுகிற நேரத்தில் ஐந்து அப்பமும் இரண்டு மீனும் இருக்கிறது என்று அந்திரேயா சொல்லியிருப்பது எவ்வளவு தைரியமான வார்த்தை.

இந்த சம்பவத்தை திரும்பத் திரும்ப வாசித்துப் பார்த்தேன், அற்புதம் செய்ய இயேசு திட்டமிட்டிருப்பதை அந்திரேயா உட்கிரகித்து விட்டார் என்று நினைக்கிறேன். ஆகவேதான், ஐந்து அப்பமும் இரண்டு மீனைக் கொண்டு ஐயாயிரம் பேரை அவர் போஷிக்கப் போகிறார் என்றுணர்ந்து அதை அவரிடம் அறிவித்தார்.

இயேசு மனதிற்குள் என்ன நினைத்தார், எப்படிப் பேசுவார் என்பதை அந்திரேயா நன்றாகவே அறிந்திருந்தார். உங்களிடத்தில் என்ன இருக்கிறது ? என்று இயேசு கேட்ட பொழுது அவர் அதைக் கொண்டு அற்புதம் செய்யப் போகிறார் என்று அந்திரேயாவிற்கு பொறி தட்டி விட்டது.

இவையெல்லாம் உங்களுக்கு எப்படித் தெரியும், அடுக்கிக் கொண்டு போகிறீர்களே என்று நீங்கள் நினைப்பீர்கள் என்று எனக்குத் தெரியும். சுவிசேஷங்களை கருத்தாய் வாசித்த

பொழுது அந்திரேயாவுக்கு இப்படிப்பட்ட உள் உணர்வு எப்படி வந்திருக்கும் என்பது என்னால் உணர முடிகிறது.

யோவான் இரண்டாம் அதிகாரத்தை வாசித்துப் பாருங்கள் (2: 12) கலிலேயாவிலுள்ள கானா ஊரிலே இயேசு தமது அற்புதத்தைச் செய்தார். இந்த அற்புதம் நடைபெற்ற திருமணத்திற்கு இயேசுவும், அவருடைய சீஷர்களும் அழைக்கப்பட்டிருந்தார்கள் என்று யோவான் அழுத்தமாக பதிவு செய்துள்ளார் (2 2).

அதாவது இயேசு தமது முதலாவது அற்புதமாகிய தண்ணீர் திராட்ச ரசமாக்கினது ஆதி சீஷர்களாகிய யோவான், அந்திரேயா ஆகியோர் முன்னிலையில்தான் நடந்தது.

அது மட்டுமல்ல. அந்திரேயா அவரை தன் வீட்டிற்கு அழைத்துச் சென்றிருந்தார் (மாற் 1:29) அங்கே அவர் பேதுருவின் மாமியை சுகப்படுத்தினார். இவைகளெல்லா வற்றையும் சேர்த்துப் பார்க்கும் பொழுது எதிலும், எந்த இடத்திலும் அற்புதங்களை நிகழ்த்த அவர் வல்லவர் என்பதை அந்திரேயா உணர்ந்திருந்தார் என்று அறிய முடியும்.

கடந்த நாட்களில் தேவன் செய்தவைகளை இருதயத்தில் வைத்து விசுவாசத்தை வீரியமடையச் செய்ய வேண்டியது அவசியம். அப்படிச் செய்தால் உங்களுடைய ஒவ்வொரு அசைவுகளிலும் அற்புதம் நடக்கும் என்பது நிச்சயம்.

இனிமேல்தான் இந்த அதிகாரத்தின் கருப் பொருளுக்குள் நுழையப் போகிறோம். உங்களிடத்தில் ஏதாகிலும் இருக்கிறதா? என்று இயேசு கேட்ட பொழுது அந்திரேயாவின் பதில் எவ்வளவு அழுத்தமாக, ஆழமாக இருந்தது என்பதை எண்ணிப் பாருங்கள்.

'இங்கே ஒரு பையன் இருக்கிறான்' அவன் கையில் ஐந்து வாற் கோதுமை அப்பங்களும், இரண்டு மீன்களும்



இருக்கிறது.

கொஞ்சம் யோசித்துப் பாருங்கள். அவ்வளவு பெரிய கூட்டத்தில் ஒரு சிறு பையனைக் குறித்த தகவலை அந்திரேயா தெளிவாகச் சொல்கிறார். சாப்பிடுகிற பொருளைக் குறித்த விபரத்தை அடுத்தவரிடத்தில் அவ்வளவு சீக்கிரமாக சிறுவர்கள் பகிர்ந்து கொள்ள மாட்டார்கள் என்பதை நான் அனுபவப் பூர்வமாக அறிந்திருக்கிறேன். அவர்களோடு பழகி நட்புறவை ஏற்படுத்திக் கொண்டால் மாத்திரமே அவர்கள் நம்மிடத்தில் வாயைத் திறந்து பேசுவார்கள்.

அப்படியானால் அவ்வளவு பெரிய கூட்டத்தில் மற்ற சீஷர்கள் பெரியவர்களிடத்தில் ஈடுபாடாய் இருக்க இந்த அந்திரேயா அரும்புகளிடத்தில் அன்பு பாராட்டி அளவளாவிக் கொண்டிருந்தார். அதன் விளைவுதான் அப்பங்களைக் குறித்த விவரங்களை அவன் பெற்றது.

பிள்ளைகளிடத்தில் பழக்கமில்லாத ஒருவர் சாப்பிடுகிற பொருளை பெற்று விட முடியாது. அவனிடத்தில் உள்ள அத்தனை அப்பங்களையும், இயேசுவிடம் கொடுப்பதற்கு அந்த பையனை இசைய வைத்ததிலிருந்து அந்திரேயாவுக்கு அவனிடத்தில் எவ்வளவு செல்வாக்கு இருந்தது என்பதை உணர முடியும்.

இயேசு வனாந்தரத்தில் அற்புதம் நிகழ்த்தியதற்கு சிறுவன் தந்த ஐந்தப்பம் இரு மீன் காரணமென்றாலும் அந்த சூழலை உருவாக்கி அந்தப் பையனை ஆயத்தப்படுத்தியவர் அந்திரேயா என்றால் அது மிகையாகாது. பிரியமானவர்களே! பிள்ளைகள் மிகவும் விசேஷமானவர்கள். தேவனுடைய இராஜ்யத்தில் முக்கியப் பங்கு அவர்களுக்கு இருக்கிறது.

★ சிறு பிள்ளைகள் என்னிடத்தில் வருகிறதற்கு இடங் கொடுங்கள்.

★ நீங்கள் மனந் திரும்பி பிள்ளைகளைப் போல் ஆகுங்கள்.

★ இறை ராஜ்யம் அப்படிப்பட்டவர்களுடையதாய் இருக்கிறது.

★ இயேசு சிறு பிள்ளைகளை அணைத்து ஆசீர்வதித்தார்

போன்ற வசனங்களை வாசித்துப் பார்த்தால், ஆண்டவருக்கு முன்பாக சிறுவர்கள் எவ்வளவு முக்கியமானவர்கள் என்பதை உணர முடியும். ஆனால், இப்படிப்பட்ட விலையேறப் பெற்ற சிறுவர்களை சிலர் கண்டு கொள்வதில்லை என்பது மாத்திரமல்ல அலட்சியப்படுத்து கிறார்கள் என்பதுதான் வேதனைக்குரியதாகும்.

சமூக அமைப்பிலும், சபையிலும் நலமும் வளமும் உண்டாக வேண்டுமென்றால், சிறு பிள்ளைகளைக் குறித்த தரிசனமும் – கரிசனமும் நமக்கு உண்டாக வேண்டும். ‘ ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா’ என்ற பழமொழியை பலருக்கும் சொல்கிற நாம் ஐந்தை அலட்சியப்படுத்தி விட்டு ஐம்பதை வளைக்கப் பிரயாசப்படுவதுதான் நகைப்புக்குரிய ஒன்று.

ஆதி சீஷர்கள், அப்போஸ்தலர் அந்தக் கிரீடத்தை சூட்டிக் கொண்டு நிமிர்ந்து நிற்காமல் குழந்தைகளிடம் குணிந்து பழகிய அந்திரேயாவுக்காக கர்த்தரை ஸ்தோத்தரிக்கிறேன்.

ஒரு பிரசங்கியார் தன் ஊழியத்தை முடித்துக் கொண்டு திரும்பியவுடன் தன் நண்பர்களைப் பார்த்து இன்று என்னுடைய பிரசங்கத்தினால் இரண்டரை பேர் ஆண்டவரை ஏற்றுக் கொண்டார்கள் என்றாராம். அதைக் கேட்ட நண்பரொருவர் இரண்டு பெரியவர் ஒரு சிறியவர் ஆக இரண்டரை பேர் என்று அதி மேதாவித்தனமாக பதில் சொன்னாராம்.



பிரசங்கியார் சிரித்துக் கொண்டே, இல்லை இல்லை இரண்டு சிறியவர் ஒரு பெரியவர். நான் சொல்வதை சரியாய் கவனியுங்கள் தங்கள் வாழ்க்கை முழுவதையும் கிறிஸ்துவுக்கு ஒப்புக் கொடுத்து விட்ட குழந்தைகள் முழுமையானவர்கள். தன் வாழ்நாளில் பாதியை வீணாய் செலவழித்து விட்டு கடைசிக் காலத்தில் தன் வாழ்க்கையை ஆண்டவருக்கு தந்தவர்தான் அந்த அரை நபர் என்றாராம்.

புரிந்து கொண்டிருப்பீர்களென்று நம்புகிறேன். குழந்தைகளை சரியான நேரத்தில் கிறிஸ்துவுக்குள் நடத்துவோமானால் மிகப் பெரிய தேவ ராஜ்யத்தை நாம் ஸ்தாபிக்கிறோம் என்பது மறுக்க முடியாத உண்மையாகும்.

நான் சிறுவனாக இருக்கும் பொழுது எனக்கு இந்த வாய்ப்பில்லை. என் பெற்றோர் தங்களின் வேலையினிமித்தம் கிராமத்தில் குடியிருந்தார்கள். அங்கிருந்து 15 கி.மீ. தொலைவில் தேவாலயம் இருந்தது. போக்குவரத்து சரியாக இல்லாத அந்தக் கால கட்டத்தில் 15 கி.மீ. என்பது மிகப் பெரிய தூரம்.

எனவே, வாரந்தோறும் ஆலயத்திற்கு போவதென்பது சாத்தியமில்லாத ஒன்று. பண்டிகை நாட்கள் மாத்திரம் ஆலயத்திற்குப் போவோம்.

நல்ல வேளை, என் உயர்நிலைப்பள்ளி படிப்பு ஒரு கிறிஸ்தவ பள்ளியில் தொடர்ந்தது. அங்கே விக்கிரக ஆராதனைக்குரிய எந்தக் காரியமும் இல்லையென்பது – சிறப்பானாலும் கிறிஸ்துவை என்னுள் பதிப்பதற்கு போதிய முயற்சி யாரும் எடுத்துக் கொள்ளவில்லை என்பதுதான் வேதனைக்குரிய விஷயமாகும்.

நான் பத்தாம் வகுப்பு படிக்கும் போது பள்ளியின் சார்பாக சென்னைக்கு சற்று அருகே உள்ள தாசர்புரத்தில் நடைபெற்ற மாணவ முகாமில்தான் கிறிஸ்தவனாய் பிறந்த நான்

கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டேன். பத்து நாட்கள் பரலோக அனுபவம்தான்.

பள்ளிக்கூடம் வந்ததும் எல்லாம் மறந்து போய் விட்டது. பழையவைகள் மீண்டும் புகுந்து கொண்டன. பக்குவப்படாதவனாகவே பள்ளிப் படிப்பை முடித்து வெளியேறினேன்.

நான் இதை எழுதக் காரணம் என் இளம் வயதில் என்னைப் புரிந்து கொள்ளவோ, என்னை கிறிஸ்துவுக்குள் நடத்தவோ போதுமான நபர் என்னை சுற்றி இல்லை. ஆனாலும், தேவ கிருபையினால் எனது பதினெட்டாவது வயதில் இரட்சிக்கப்பட்டேன்.

தேவனுடைய அநாதி நோக்கத்தின்படி எனது பதினெட்டாவது வயதிலேயே இரட்சிக்கப்பட்டேன், பரிசுத்த ஆவியால் நிரப்பப்பட்டேன், இந்த ஊழியத்திற்கான அழைப்பைப் பெற்றேன்.

எனக்கென்று பிரத்தியேக தரிசனமும், அழைப்பும் இருந்தாலும், நான் ஊழியத்தில் முதலில் அடியெடுத்து வைத்த தலம் சிறுவர் ஊழியம்தான். இதில் இருக்கிற மகிழ்ச்சியைப் போல் உலகத்தில் வேறு எங்கிலும் கிடையாது.

சிறுவர் ஊழியத்தில் வருவாய் இருக்காது, புகழ்ச்சி இருக்காது, செலவுகள் இருக்கும் என்பது உண்மையானாலும் தேவனுடைய இராஜ்யம் வலுவாய் கட்டப்படுவதற்கு இதை விட சிறந்த ஊழியம் இருக்க முடியாது.

இன்றளவும் சிறுவர் ஊழியத்திற்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கிறோம், எனது சபையும் முக்கியத்துவம் கொடுக்கிறது, என்னால் குழந்தையாய் இருக்கும் பொழுது பிரதிஷ்டை பண்ணப்பட்டவர்கள் சிறுவர் ஊழியத்தில் இன்று தேறினவர்களாய் நிற்பது எவ்வளவு பெரிய மகிழ்ச்சியாய்



இருக்கிறது.

பிரியமானவர்களே! உங்கள் வீட்டில், உங்கள் பள்ளியில், உங்கள் தெருவில், உங்களைச் சுற்றிலும் எத்தனை அரும்புகள் இருக்கிறது. கூர்ந்து கவனியுங்கள். அவர்களை சாத்தான் பிடிப்பதற்கு முன்பாக அவர்கள் கிறிஸ்துவை பிடித்துக் கொள்வதற்கு நாம் உதவ வேண்டும். இந்த உக்கிராணத்துவம் நம் ஒவ்வொருவருக்கும் கொடுக்கப்பட்டிருக்கிறது.

நான் சீஷன், எனக்கு ஒன்றும் தெரியாது என்று ஒதுங்கவும் முடியாது, நான் அப்போஸ்தலன் ஆயிரம் வேலை இருக்கு என்று அல்லத் தட்டவும் முடியாது. சீஷனும், அப்போஸ்தலனுமாகிய அந்திரேயா சிறுவர்களோடு பழகி சிநேகத்தை சம்பாதித்ததினால்தான் கிறிஸ்து வனாந்தரத்தில் மகிமைப்பட அடித்தளம் போட முடிந்தது.

அந்திரேயாக்களை கர்த்தர் எழுப்புவாராக! அரும்புகளை சிநேகிக்கும் அன்பர்களாய் மாறுவார்களாக ஆசீர்வாதமிக்க அடுத்த தலைமுறையை ஆயத்தப்படுத்தும் அற்புதப் பணிக்கு தங்களை அர்ப்பணிப்பார்களாக!

# 6

# அப்போஸ்தலனாகிய அந்திரேயா

ஆரம்ப காலத்தில் இயேசு கிறிஸ்துவுக்கு சீடராக மாத்திரம் இருந்த இவர் அவரால் அழைக்கப்பட்ட போது தனது வலையையும், படவையும் விட்டு விட்டு பூர்வத் தொழிலிலிருந்து புண்ணியரோடு தனது பயணத்தைத் தொடர்ந்தார். தனது இலட்சியப் பயணத்தில் எந்த இடத்திலும் பின் வாங்காமல் இறுதி வரை தனது ஓட்டத்தை இயேசுவோடும், இயேசுவுக்குள்ளும் ஓடி முடித்தார் என்பதுதான் தனிச் சிறப்பு.

இராமுழுவதும் தனித்து ஜெபம் பண்ணி தம்மோடு இருக்கும்படியாகவும், அற்புதங்கள் செய்யும்படியாகவும், இயேசு அழைத்து அப்போஸ்தலர் என்று பேரிடப்பட்ட பன்னிருவரில் அந்திரேயாவும் ஒருவர் என்பது முக்கியமான செய்தி.

முதல் மூன்று சுவிசேஷங்களில் அப்போஸ்தலருடைய பெயர்ப் பட்டியல் வருகிற இடத்தில் அந்திரேயாவின் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளதேயன்றி வேறு எந்த இடத்திலும் அவர் பெயர் குறிப்பிடப்படவில்லை. இன்னும் கூர்ந்து கவனிப்போமானால் மத்தேயு, லூக்கா ஆகிய புத்தகங்களில் தரப்பட்டுள்ள அப்போஸ்தலர் பட்டியலில் அந்திரேயாவின் பெயர் இரண்டாவது இடத்தில் வருகிறது.

இது ஒரு புறம் இருக்க மாற்கு, அப்போஸ்தலர் நடபடிகளில் உள்ள பட்டியலில் அந்திரேயாவின் பெயர் நான்காவது இடத்திற்கு தள்ளப்பட்டுள்ளது.

இங்கேதான் அந்திரேயா நிற்கிறார். கணக்குப்படி பார்த்தால் இயேசு கிறிஸ்துவின் முதல் சீடர், இன்னும் அதிகமாக



சொல்ல வேண்டுமானால் மேசியாவைக் குறித்து சாட்சி சொல்லி முதல் ஆத்துமாவை அழைத்து வந்தவரும் இவர்தான். இப்படிப்பட்ட VIP அந்தஸ்து பெற்ற சீனியர் அப்போஸ்தலர். தனது பெயர், நிலை எந்த இடத்தில் வைக்கப்பட்டாலும், தள்ளப்பட்டாலும் அவர் கவலைப்பட்டதாக தெரியவில்லை.

இன்னும் சொல்லப் போனால் தனது பெயர் வெளி வராமலே பார்த்துக் கொண்டார் என்பதுதான் குறிப்பிட வேண்டிய சிறப்பம்சம்.

அன்றைய அந்திரேயாவின் நிலையையும், இன்றைய கிறிஸ்தவ நிலையையும் ஒப்பிட்டுப் பார்த்தால் கிறுகிறுப்பு வருகிறது. ஜுனியர், சீனியரிடையே எத்தனை போட்டிகள். சந்தி சிரிக்கும் அளவிற்கு அடிதடிகள். பதவி வெறியில் முதலிடம் பிடிக்க எத்தனை தரங் கெட்ட செயல்கள்.

நமது இரட்சகராகிய இயேசு கிறிஸ்து ஊழியக்காரன் எப்படியிருக்க வேண்டும் என்பதைக் காண்பிக்க சீஷர்களின் கால்களை கழுவினார். ஆனால், இன்றோ ஊழியர்களில் சிலர் தங்கள் தலைமைத்துவத்தை காத்துக் கொள்ள அடுத்தவரின் கால்களை வாரி விடுவது எத்தனை பரிதாபம்.

எனக்கு ஆச்சரியமாய் இருக்கிறது. இவ்வளவு சீனியரான அந்திரேயா எப்படி இதையெல்லாம் கண்டு கொள்ளாமல் தானுண்டு தன் வேலையுண்டு என்று அமைதலாக இருந்தார். ஒன்று மாத்திரம் புரிகிறது. இவர் யாரால் நடத்தப்பட்டாரோ அவரின் பாதிப்பு இவருக்குள் அதிகமாகவே இருந்திருக்கிறது.

ஆம் நான் சொல்வது உண்மை. ஒருவர் எவரால் கிறிஸ்துவுக்குள் நடத்தப்படுகிறாரோ அவருக்குள் நடத்தினவரின் குணாதிசயங்கள் பதிந்து விடுவது உண்மை. இதை என்

அனுபவத்திலும், என் சபை மக்களின் வாழ்க்கையிலும் கண் கூடாக காண்கிறேன்.

ஆராதனைக்கு தாமதமாக வருவதை வழக்கமாக கொண்டுள்ள நபர் மூலம் சபைக்கு நடத்தப்பட்ட ஆத்துமாக்கள் அவர்களும் எப்பொழுதும் தாமதமாகவே வருவதையும், ஊழியத்திற்கு உதாரகுணமாய் கொடுக்கும் நபர்களால் சபைக்குள் நடத்தப்பட்டவர்கள். தாங்களாகவே உற்சாகமாய் கொடுப்பதைப் பார்க்கும் பொழுது இவைகளெல்லாம் ஒட்டுவார் ஒட்டி சுபாவங்கள்' என்பதை புரிந்து கொண்டேன்.

கிறிஸ்துவுக்குள் வருவதற்கு முன்பாக தனக்கு குருவாயிருந்தவரும், கிறிஸ்துவை தனது வாழ்வில் காட்டிக் கொடுத்தவருமாகிய யோவான்ஸ்நானனின் திவ்விய சுபாவங்கள் அந்திரேயாவிடம் அதிகமாகவே காணப்பட்டது குறிப்பிடத்தக்கது.

நான் அவர் அல்ல, நான் எலியா அல்ல, நான் தீர்க்கதரிசி அல்ல, அவரின் பாதரட்சையை அவிழ்ப்பதற்கு தகுதியுள்ளவன் அல்ல, என்று தன்னை ஒன்றும் இல்லாதவனாக காண்பித்தது மாத்திரமல்ல. 'நான் சிறுகவும் அவர் பெருகவும் வேண்டும்' என்று இயேசுவுக்குள் தன்னை மறைத்துக் கொண்ட யோவான் ஸ்நானனின் அச்சடை யாளங்கள், அப்படியே அந்திரேயாவின் வாழ்க்கையில் பிரதிபலிக்கிறது.

உங்கள் அழைப்பையும், தெரிந்து கொள்ளுதலையும் நிறைவேற்ற மாத்திரம், தீவிரப்படுங்கள். பதவிக்காகவோ, முக்கிய இடத்தில் நீங்கள் வைக்கப்படுவதற்காகவோ, எள்ளளவும் முயற்சி செய்யாதீர்கள். பதவியும், பொறுப்புகளும் உங்களைத்



தேடி வந்தால் கூட அவைகளை எடுத்தவுடனே ஏற்றுக் கொள்ளாதீர்கள். அவைகள் உங்கள் வேகத்தையும் இன்னும் கொஞ்சம் அழுத்தமாக சொல்ல வேண்டுமென்றால் உங்கள் விவேகத்தையும் குறைத்து விடும்.

தேவ சித்தத்தை நிறைவேற்றுவதை விட பதவியை தக்க வைப்பதற்கும், பத்துப் பேருக்கு பதில் சொல்வதற்குமே நம்முடைய சிந்தை செயல்பட்டுக் கொண்டிருக்கும். அந்திரேயாவைப் போல எந்த இடத்தில் நம்முடைய பெயர் வருகிறது என்பதைப் பற்றி கவலைப்படாமல், எந்த விதத்தில் ஆண்டவருக்குப் பயன்படலாம் என்று ஆவிக்குரிய சிந்தையோடு செயல்படுங்கள்.

ஆரோன், தனக்குப் பின்னால் பிறந்த மோசேயை முன் நிறுத்தி அவன் கைக்கு தாங்கலாக நின்றது போல, அவனை ஆண்டவனாக எண்ணி அவனுக்கு வாயாக விளங்கினது போல அந்திரேயாவும் தன்னால் வழி நடத்தப்பட்டதன் சகோதரனாகிய பேதுரு முந்திக் கொள்வதற்கு வழி விட்டு விட்டு அவன் தலைமைத்துவத்தை ஏற்றுக் கொண்டு இசைந்த ஆத்துமாவாய் நடந்து கொண்டது போல நாமும் நடந்து கொள்வோம், அது நல்லது.

அவன் பெயர் எப்படியோ அவனும் அப்படியே என்று அபிகாயில் நாபாலைக் குறித்து தாவீதிடத்தில் சொன்னது போலவே மனிதர்கள் (வேதத்தில்) தங்கள் பெயரின் படி சுபாவத்தை வெளிப்படுத்தியிருக்கிறார்கள். இந்த அளவுகோலின்படி 'மனிதத் தன்மையுள்ளவன்' என்ற அர்த்தம் கொண்ட பெயரையுடைய அந்திரேயா நல்ல மனிதத் தன்மை உள்ளவனாக நடந்து கொண்டார் என்பதுதான் மெச்சிக் கொள்ள வேண்டிய சிறப்பம்சம்.

நான் உலக மனிதர்களைக் குறித்து இங்கு எழுதவில்லை. உண்மைக் கிறிஸ்தவர்கள், ஊழியர்கள் நாங்கள்தான் என்று உளறிக் கொண்டிருக்கும் உளுத்துப் போனவர்களைக் குறித்து எழுதுகிறேன்.

பாட்டும், பரிசுத்தப் பேச்சும் நன்றாகத்தான் இருக்கிறது. ஆனால், மொழி, ஊர், ஜாதி ஆகியவற்றின் பாசம் (வெறி) இவர்களுக்குள் கனல் விட்டு எரிந்து கொண்டுதான் இருக்கிறது. சந்தர்ப்பம் வருகிற பொழுது 'டைம் பாம்' போல வெடிக்கிறது. சபையையும், கிறிஸ்தவ சமூகத்தையும் சீரழிக்கிறது.

இதன் விளைவு கொஞ்ச நஞ்சமல்ல. சில ஆலயங்கள் நீதிமன்ற வழக்கினால் பூட்டப்பட்டுக் கிடக்கிறது. சில ஊர்களில் ஜாதிக்கொரு திருச்சபை எழுப்பப்பட்டிருக்கிறது. கொஞ்சம் விட்டால் பரலோகத்தையே ஜாதி அடிப்படையில் பட்டா போட்டு விடுவார்கள்.

கொஞ்சம் சூடாகி விட்டேனா என்று யோசிக்காதீர்கள், யதார்த்தத்தை பதிவு செய்ய வேண்டுமென்பதே எனது விருப்பம். அதற்கு இதுவா இடம், அந்திரேயாவைப் பற்றி எழுது என்று நீங்கள் கொஞ்சம் டென்ஷனாவது எனக்குப் புரிகிறது. அந்திரேயாவின் அடுத்த சுபாவத்தைச் சொல்லத்தான் இவ்வளவு பீடிகை என்று சொல்ல விரும்புகிறேன்.

ஒரு நாள் இயேசு கிறிஸ்து மிகப் பெரிய கூட்டத்தில் இருந்தார். அது பண்டிகைக் காலம். பண்டிகைக்கு வந்த கிரேக்கரில் சிலர் இயேசுவைக் காண விரும்பினார்கள். அவர்கள் கிரேக்கர். ஆகவே, இயேசுவிடம் நம்மை நடத்த 'நம்ம ஆள்' யாராவது இருக்க மாட்டார்களா என்று முயற்சித்தனர்.

அவர்களுக்கு அகப்பட்டவர் பிலிப்பு. பிலிப்பு கிரேக்கன் அல்ல. ஆனால், பிலிப்பு என்பது கிரேக்கப் பெயர். பெயரைப் பார்த்து நாம் ஏமாறுவது போல அவர்களும் ஏமாந்து விட்டார்கள் என்று வைத்துக் கொள்ளுங்களேன். பிலிப்பு சூப்பர் வேலை செய்தார். இந்த கிரேக்கர்களை மற்ற சீஷர்களுக்கு அறிமுகம் செய்து வைத்தால், 'அட பண்டிகைக்கு வந்தீங்களா?' பார்க்க வேண்டிய இடங்களைப் பார்த்து விட்டு ஊரு போய்ச் சேருங்க, இவர் யூதர்களுக்காக வந்தவர், என்று வாயை அடைத்து வந்த வழி அனுப்பியிருப்பர்.



ஆனால், அவனோ அவர்களை அப்போஸ்தலனாகிய அந்திரேயாவினிடத்தில் அறிமுகம் செய்து வைக்கிறான். மனிதத் தன்மையுள்ள, மனித நேயமுள்ள, மனிதரை மதிக்கிற அந்திரேயா அவர்களை இயேசுவிடம் அழைத்துச் சென்றார், அறிமுகம் செய்து வைத்தார்.

பிரியமானவர்களே! அறிந்தவர்களிடத்தில் மாத்திரமல்ல அந்நியர்களிடத்திலும் அன்பு காட்டவும், அவர்களை ஆண்டவருக்குள் வழி நடத்தவும் ஆர்வம் உள்ளவர்களாய், நாமிருக்க வேண்டும். அப்போஸ்தலனாகிய அந்திரேயா ஒரு ஆத்தும ஆதாயகன் என்பதை முந்தின அதிகாரத்தில் வாசித்தீர்கள் அல்லவா?

அப்போஸ்தல ஊழியம் என்பது பதவியல்ல, அஃது கட்டுகிற ஊழியம். தன் சகோதரனாகிய பேதுருவை (எருசலேம்), சிறு பையனை (யூதேயா), கிரேக்கர்களை (சமாரியா), இயேசுவுக்கு அறிமுகம் செய்து வைத்ததிலிருந்து அவரின் ஊழியம் கிரமமானதென்றும், முழுமையானது என்றும் நம்மால் புரிந்து கொள்ள முடிகிறது.

யோவான் நற்செய்தி நூலில் தன் உடன் சீஷனும்,

அப்போஸ்தலனுமாகிய அந்திரேயாவின் பெயரை எல்லா இடங்களிலும் யோவான் மறவாமல் குறிப்பிட்டு இருக்கிறார். எந்த இடத்திலும் அவரின் பெயரை இருட்டடிப்புச் செய்யவில்லை.

இந்த மகிழ்ச்சியோடு யோவான் சுவிசேஷத்தை நிறைவு செய்த பொழுது எனக்கு இன்னும் ஒரு மகிழ்ச்சி ஏற்பட்டது.

யோவான் இருபத்தோராம் அதிகாரத்தை வாசித்துப் பாருங்கள். பேதுரு இயேசுவின் காலியான கல்லறையைக் கண்ட பின்னும் (20 ஆம் அதிகாரம்) கடலுக்கு மீன் பிடிக்கச் செல்லுகிறான். அவனோடு சென்றவர்களின் பட்டியலைப் பாருங்கள்.

1. பேதுரு
2. திதிமு என்னப்பட்ட தோமா
3. நாத்தான் வேல்
4, 5. செபதேயுவின் குமாரர் (யாக்கோபு, யோவான்)
6, 7. மற்ற இரண்டு சீஷர்கள்

யோவான் தந்துள்ள இந்த பட்டியலில் அந்திரேயாவின் பெயரை உங்களால் காண முடியாது.

மற்ற இரண்டு சீஷரில் ஒருவன் அந்திரேயாவாக இருக்கக் கூடாதா என்று நீங்கள் கேள்வி எழுப்பினால் இந்த சுவிசேஷம் முழுவதிலும், தன் பெயரை மறைத்து வைத்திருந்த யோவான் செபதேயுவின் குமாரன் என்று தன்னை அடையாளம் காட்டியுள்ள பொழுது அந்திரேயாவின் பெயரை இருட்டடிப்பு செய்வாரா ? என்று எதிர் கேள்வி தொடுப்பேன்.

ஏன் குழப்புறீங்க ? என்று கவலைப்படாதிருங்கள். எந்தக் காலத்திலும் பின் மாற்றம் அடையாத, பின் வாங்கிப் போகாத, சந்தேகப்படாத, சறுக்கலடையாத சமச்சீர் ஓட்டம் ஓடியவர்தான் இந்த அப்போஸ்தலனாகிய அந்திரேயா என்று சொல்ல வருகிறேன் (இது இறையியல் நிரூபணமல்ல என் ஆவியில் ஏற்படுகிற உள் உணர்வு).

ஆதித் திருச்சபையின், ஆரம்பத்தில் அந்திரேயாவுக்கு பெரும் பங்கு உண்டு. ஆதித் திருச்சபையின் வரலாற்றை நமக்கு அளிக்கிற அப்போஸ்தல நடபடிகளின் முதல் அதிகாரத்தில் அவருடைய பெயர் பதிவு செய்யப்பட்டுள்ளது.

இயேசு கிறிஸ்துவின் கட்டளைப்படி சீஷர்களோடு இணைந்து பரிசுத்தாவிக்காக மேல் வீட்டில் காத்திருந்தார் (அப். 1 : 13). மேலும், பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தைப் பெற்ற பிறகு, அப்பொழுது பேதுரு பதினொருவரோடுங் கூட நின்று (அப்.2 :14) என்று வசனம் சொல்கின்றபடியால் ஆதி சபையினை அஸ்திவாரம் பண்ணின பன்னிருவரில் அப்போஸ்தலனாகிய அந்திரேயாவும் ஒருவர் என்று தெளிவாகிறது.

எனவே, இந்த அடக்கமுள்ள அப்போஸ்தலனாகிய அந்திரேயா கிறிஸ்துவின் வாக்கின்படியும், கிறிஸ்து வெளிப்படுத்தின விசேஷத்தின்படியும், மகிமையின் இராஜ்யத்தில் இஸ்ரவேலின் கோத்திரங்களில் ஒன்றை நியாயந் தீர்க்க சிங்காசனத்தில் அமருவார் என்றும் (மத் 19 : 28) பரலோகத்திலிருந்து இறங்கி வரப் போகிற பரிசுத்த நகரத்தின் அஸ்திவாரக் கற்களில் ஒன்றில் இந்த அந்திரேயாவின் பெயர் பதிக்கப்பட்டிருக்கும் (வெளி 21 : 14) என்பது எவ்வளவு மேன்மை.

அந்திரேயாவைக் குறித்த குறிப்புகளின் தடயம் திருமறைக்குள் இத்துடன் முடிவு பெற்றாலும், திருச்சபை வரலாற்றை எடுத்துச் சொல்கிற ஆய்வு நூல்கள்

அந்திரேயாவின் மிஷினரிப் பயணங்களையும், அப்போஸ்தல ஊழியத்தையும் அவர் இரத்த சாட்சியாய் மரித்ததையும் நமக்கு தெரிவிக்கின்றன. அவைகளை தொடர்ந்து சில பக்கங்கள் எழுத விரும்புகிறேன்.

பல்வேறு திருமறை வரலாற்று ஆசிரியர்கள் ஆராய்ச்சியின் அடிப்படையிலும், பாரம்பரியக் கூற்றுகளின் அடிப்படையிலும் அதிக தகவல்களை தந்துள்ளனர்.

அப்போஸ்தலர்கள் சிதறி பல்வேறு நாடுகளுக்கு சென்று கிறிஸ்துவின் நற்செய்தியை அறிவித்தார்கள். அப்படிப்பட்ட நாட்களில் இந்தியாவிற்கு வந்து கேரளா முதல் தமிழகத்தின் தலைநகர் வரை திருச்சேவை செய்தவர்தான் தோமா.

ஆதி அப்போஸ்தலருக்கு நாடுகளைக் கடந்து ஊழியம் செய்வது சிரமமாக தோன்றவில்லை. உபத்திரவங்களின் மத்தியில் உன்னதருக்கு உழைப்பதை மேன்மையாகக் கருதினார்கள். இதைப் போலவே அப்போஸ்தலனாகிய அந்திரேயாவும் பல நாடுகளுக்கு சென்று சபைகளை ஸ்தாபனம் பண்ணி இறுதியில் இரத்த சாட்சியாய் மரித்தார்.

இதிலும் விசேஷம் என்னவென்றால் அவர் மரித்த பல நூற்றாண்டுகளுக்குப் பின்னர் அவரது உடலில் எஞ்சியிருந்த எலும்புகளை எடுத்துச் சென்று தங்கள் நாட்டில் அடக்கம் செய்து அவரைத் தங்கள் நாட்டின் புரவலராக போற்றுகிறவர்களும் உண்டு.

இன்று ரஷ்யாவின் ஒரு பகுதியாகிய சித்தியாவில் அந்திரேயா ஊழியம் செய்தார். சித்தியர்களைக் குறித்து சொல்லும் பொழுது காட்டு மிராண்டிகள் என்று வரலாற்று ஆசிரியர்கள் கூறுகின்றனர். அப்படிப்பட்டவர்களுக்கு



கிறிஸ்துவை அறிவித்து அவர்களைக் கிறிஸ்துவுக்குள் கொண்டு வந்தார். எனவேதான், ரஷ்யாவின் புரவலர் என்று அந்திரேயா அழைக்கப்படுகிறார்.

அந்திரேயாவின் ஊழியம் கிரீஸிலும் தொடர்ந்தது. சித்தியாவுக்கும், கிரீஸிக்கும் அக்காலத்தில் போக்குவரத்துப் பாதை இருந்தது என்றும், ஆரம்ப காலத்தில் சித்தியாவிலும் அந்திம காலத்தில் கிரீஸில் அவர் அருட்பணி ஆற்றினார் என்றும் நீங்கள் புரிந்து கொள்வீர்களானால் குழப்பம் இராது.

கிரீஸ் மக்கள் அந்திரேயாவின் சேவையைப் போற்றி அவரை கிரீஸ் நாட்டின் புரவலர் என்று அழைக்கின்றனர்.

அந்திரேயாவின் கடைசிக் காலத்தைக் குறித்து எழுதி இந்த நூலை நிறைவு செய்வதற்கு முன்பாக இன்னும் ஒரு ருசிகர தகவலை தெரிவிக்க விரும்புகிறேன்.

ஒவ்வொரு நாட்டுக் கொடிக்கும் ஒரு வரலாறு உண்டு. சுவிட்சர்லாந்தில் சிவப்பு நிறத்தின் மத்தியில் வெள்ளை நிற சிலுவை கொண்ட கொடி அழகாக இருக்கும். அதன் விவரத்தை இப்போது நான் எழுதப் போவதில்லை.

இதைப் போலவே நீல நிறப் பின்னணியில் வெள்ளை நிற சிலுவையைக் கொடியாகக் கொண்ட நாடு ஸ்காட்லாந்து தேசமாகும். ஸ்காட்லாந்து மக்கள் அந்திரேயாவை ஸ்காட்லாந்தின் புரவலர் என்று அழைக்கின்றனர்.

அங்கு அந்திரேயா சென்று ஊழியம் செய்தாரா ? என்றால், இல்லை என்பதுதான் யதார்த்தம். ரெகுலர்ஸ் என்ற சந்நியாசி ஸ்கான்டான்டி நோபிலில் வைக்கப்பட்டிருந்த அந்திரேயாவின் எலும்புகளின் சில பகுதிகளை ஸ்காட்லாந்திற்கு எடுத்துச் சென்று அங்கே அடக்கம் பண்ணினார்.

அந்திரேயாவின் நின்று கொண்டிருக்கும் நிலையிலான சிலையும், சிதலமடைந்த ரெகுலர்ஸ் தேவாலயமும் இன்னமும் ஸ்காட்லாந்தில் நின்ற நிலையில் உள்ளது. ஸ்காட்லாந்து மக்கள் நவம்பர் மாதம் 30-ந் தேதியை தூய அந்திரேயா திருநாள் என்று கொண்டாடுகின்றனர். அந்த நாளில்தான் அந்திரேயா மரித்ததாக ஆராய்ச்சிக் குறிப்புகள் கூறுகிறது.

தோமா செய்த அற்புதங்களைக் குறித்து நமது நாட்டில் பல்வேறு குறிப்புகள் நமக்கு கிடைக்கிறது போல அந்திரேயாவைக் குறித்தும் பல அற்புத நிகழ்வுகளை சரித்திர ஆசிரியர்கள் பதிவு செய்துள்ளனர்.

அந்திரேயா பல அற்புதங்களை நிகழ்த்தி இருக்கிறார். யூதாசுக்குப் பதில் அப்போஸ்தலர்கள் தெரிந்தெடுத்த மத்தியா சிறையில் அடைக்கப்பட்டிருந்த பொழுது அந்திரேயா அற்புதம் செய்து அவரைத் தப்புவித்தார். அது மட்டுமல்ல. அநேக வியாதியஸ்தர்களுக்கு அற்புத சுகமளித்தார். அப்படி அவர் சுகமளித்த ஒரு நிகழ்வுதான் அவர் இரத்த சாட்சியாய் மரிப்பதற்கு வித்தாய் மாறியது.

அகாய் நாட்டின் கவர்னராயிருந்தவனின் மனைவி மாக்சிமில்லா வியாதிப்பட்டு மரிக்குந் தருவாயில் இருந்தார். அந்திரேயாவினால் அவர் அற்புத சுகம் பெற்றார். அதோடல்லாமல் அவர் கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டார். இது கவர்னருக்கு மிகப் பெரிய ஆத்திரத்தை கொண்டு வந்தது.

இது ஒருபுறமிருக்க தன்னுடைய வேலைக்காரன் அந்திரேயாவினால் அற்புத சுகம் அடைந்ததைக் கண்ட கவர்னரின் தம்பியும் இயேசுவை ஏற்றுக் கொண்டார்கள்.

என்ன இது? தாரமும் கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டால்



தம்பியும் கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டார். இனியும் இவனை விட்டால் ஆபத்து என்று எண்ணி அந்திரேயாவை சிறையில் அடைத்து விட்டார் கவர்னர். அப்போஸ்தலர்களை பொறுத்தவரை சிறை அடைப்பு என்பது சின்ன விஷயம்தான்.

சினம் கொண்ட கவர்னர் சித்திரவதைப்படுத்த எண்ணி அந்திரேயாவை சிலுவையில் அறையக் கட்டளையிட்டார்.

ஏழு போர்ச் சேவகர்கள் சாட்டையால் மாறி மாறி அடித்து நீண்ட நேரம் வேதனைப்பட வேண்டும் என்பதற்காக ஆணியடிப்பதற்கு பதிலாக கைகளையும், கால்களையும் சிலுவையில் கட்டி தொங்க விட திட்டமிட்டனர்.

அந்திரேயா அசறவில்லை, அழவில்லை. தான் ஆசைப்பட்டது அருளப்பட்டதாக ஆனந்தப்பட்டார். சிலுவையே நான் உன்னை விரும்பினேன். நீ எனக்கு கிடைத்து விட்டாய், வா! என்னை அணைத்துக் கொள், என் ஆண்டவரிடம் என்னை அழைத்துச் செல் என்று ஜெபித்தார்.

இயேசு கிறிஸ்து அறையப்பட்ட சிலுவைப் போன்று அல்ல அந்திரேயா விருப்பப்படி X வடிவ சிலுவையில் அவர் தொங்க விடப்பட்டார். கட்டுகள் ஒரு பக்கம், கடும் வேதனை மற்றொரு பக்கம், ஆனாலும் அவர் அப்போஸ்தலப் பணி தொடர்ந்தது.

இரண்டு நாட்கள் சிலுவையில் தொங்கிக் கொண்டே அருள்நாதரைக் குறித்து சாட்சியை அருளுரையாற்றினார்.

அவர் இன்னும் சாகாததைக் கண்டு அவரை மறுதலிக்க வைக்க கொடியர் தண்டனையை தீவிரப்படுத்த திட்டமிட்டு அந்திரேயாவின் அருகில் வந்தனர். வந்தவர்கள் அதிர்ந்தனர். ஆம் அந்திரேயா கிறிஸ்துவின் சாட்சியாய், கிறிஸ்துவுக்குள் சாட்சியாய் தன் ஜீவ ஓட்டத்தை முடித்து விட்டார்.

தாகமுள்ளவனாக, இளமையில் இயேசுவை, தேடி வந்த அந்திரேயா ! சீஷனாய், அப்போஸ்தலனாய், மனித நேயமுடையவனாய், தேசங்களுக்கு புரவலராய் வாழ்ந்து தன்னை அழைத்தவருக்காக இரத்த சாட்சியாய் மரித்து இன்றும் நம்மில் சாகா சாட்சியாய் நிற்கிறார்.

என் அன்பு வாசகரே! சற்று யோசியுங்கள். நீங்கள் எப்படி? உங்களை இரட்சித்த, அழைத்த ஆண்டவருக்காக என்ன சாதித்திருக்கிறீர்கள்? அவருக்காக யாரை சந்தித்து இருக்கிறீர்கள் ?

உறவினர்கள் என்கிற பேதுருக்கள், அரும்புகள் போன்ற சிறு பையன்கள், கிரேக்கர் போன்ற புற ஜாதிகள் உங்களை சுற்றிலும் இருக்கிறார்கள். அவர்களை பரலோக வழிக்கு நடத்த வேண்டியது உங்கள் மேல் விழுந்த கடமை. நீங்கள் மவுனமாய் இருப்பீர்களென்றால் கிறிஸ்துவை அறியாத அவர்கள் நரக ஆக்கினையை அடைவார்கள். நீங்கள் குற்றவாளிகளாக நிற்பீர்கள்.

★ அந்திரேயாவைப் போல எழும்பிடுவோம்
★ ஆண்டவருக்காய் உழைத்திடுவோம்
★ ஆத்துமாக்களை சந்தித்திடுவோம்
★ ஆனந்த பாக்கியத்தை அடைந்திடுவோம்

ஆமென்.

## விண்ணக அப்பம்

*அன்பார்ந்தவர்களே,*

*போதகர்.கிறிஸ்டோபர் அவர்களின் புத்தகங்கள் படிக்க இயலாதோருக்காகவும், பார்வையற்றவர்களுக்காகவும் ஆடியோ வடிவில் வெளியிடப்படுவதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்டுவருகின்றன. போதகர். கிறிஸ்டோபர் அவர்களின் புத்தகங்கள் ஆடியோ வடிவில் விரைவில் கிடைக்கப் பெற உங்கள் ஜெபத்தினாலும், கரத்தினாலும் தாங்குங்கள்.*

*அலுவலக தொடர்பு எண்: 94888 56323*

இப்படிக்கு
**Pr.** *அலெக்ஸ் தினகரன்*